



# பாவாணர் நூல்களில் பழமொழிகள்

சி. பூ. மணி

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,



சூறையிலும் தமிழ்விளக்கின்
சுடரேற்றிக் காத்திருப்போம்
சோர்ந்தென்றும் தூங்கமாட்டோம்.
தூயதமிழ் காவாரை
தீயவழி போவாரை
துளிப்பொழுதும் தாங்கமாட்டோம்
எம்மினிய பாவாணர்
எம்மையினி வாழ்த்தாமல்
இருவிழியும் மூடமாட்டோம்.

— பா. உலகநாதன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

http :\\www.thamizham net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

-FREE E- BOOKS , www.thamizham.net.,

# பாவாணர் நூல்களில் பழமொழிகள்

தொகுப்பு : சி. பூ. மணி

உலகத் தமிழ்க் கழகம்
பெங்களூர்-௨௧.

FREE E- BOOKS , www.thamizham.net.,

முதற்பதிப்பு : தி.பி. உ0உக. கன்னி (புரட்டாசி)
(அக்தோபர் 1990)

நூல் : 'பாவாணர் நூல்களில் பழமொழிகள்'

தொகுப்பு : சி. பூ. மணி.

வெளியீடு : உலகத் தமிழ்க் கழகம், பெங்களூர்-உக.

விலை : உருபாய் எட்டு.

நூல் கிடைக்கும் இடங்கள்

C. P.mani
No. N. 10/2, Vth Cross
L. N. Puram
Bangalore - 560021.

புதுமைப் பதிப்பகம்
Pudumai Pathippagam
420/9, VIIth Cross, II Main,
Amarjyothi Nagar,
Bangalore-560 040.

அச்சிட்டோர் :

தமிழோசை அச்சகம்
84, அபிபுல்லா சாலை,
தியாகராயர் நகர்,
சென்னை - 600017.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## அன்புப் படையல்

தனித்தமிழை பிணித்த
வடசொற்களை களைந்து
இனித்தமிழாய் இயங்கெனவே
என்னையும் இணைத்த
தென்மொழிக்கு என்மொழியில்
நன்றியை படைத்தேன் !
பொன்மொழியாம்
பழமொழிக்கு
புத்தகம் கொணர்ந்தேன்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## இலக்கிய செம்மல் இரா. இளங்குமரன் அவர்களின்

# வாழ்த்துரை

பாவாணர் பெருந்தொகைச் செல்வர்; நூற்றொகைச் செல்வர்; சொற்றொகைச் செல்வர்; வழக்குத் தொகைச் செல்வர்; வரலாற்றுத் தொகைச் செல்வர்; கலைச் சொற்றொகைச் செல்வர்; விடுகதைத் தொகைச் செல்வர்; விளையாட்டுத் தொகைச் செல்வர்; பழமொழித் தொகைச் செல்வர்; இவற்றின் இவற்றின் உருவாக்கியாகவும், உரிய நெறியில் பயன்படுத்தியாகவும் திகழ்ந்து துறைதோறும் துறைதோறும் தொண்டு செய்தவர்; அவ்வாறு தொண்டு செய்ய விரும்புவார்க்கு வழிகாட்டியாகவும் வழியாக்கி யாகவும் விளங்கியவர்.

பாவாணர் திருச்சியில் பணி செய்த காலத்தே பழமொழித் தொகுப்பில் ஈடுபட்டார்; தாம் தொகுத்த துடன், தம் மாணவர்களைக் கொண்டும் தொகுத்தார்; மாணவர்களை இத் தொகுப்பில் ஊக்குவிக்கும் வகையில் காசு தந்தும் தொகுப்பித்தார். அவர், தொகைக்குத் தொகை தந்த துலக்கமிக்க செய்தி இது.

பழமொழி ஓராயிரமா? ஈராயிரமா? பதின்மூவாயிரம் தொகுக்கப்பட்டன; அவற்றை அகர நிரலும் செய்தார்; நூலாக்கம் செய்தற்கும் முயன்றார்; முகவுரை மட்டும் ஐம்பது பக்கம் வரைந்தார். திருச்சியில் இருந்து சேலத்திற்கு மாறுதலானார் பாவாணர். பழமொழி பதின் மூவாயிரத்தை வெளியிட ஒருவர் முன் வந்தார். அவர் தமிழாசிரியர் அருணாசலம் என்பார். 'இப்பொழுது

FREE E- BOOKS , www.thamizham.net.,

வரும் பிறகு வரும்' எனக் காலம் சென்றது; வராமலும் நின்றது; என்றும் எட்டாது என்னும் முடிவுக்கும் ஆயிற்று! பாவாணர் தொகைச் செல்வம், தமிழ் உலகச் செல்வம் ஆகாமல் ஒருவர்தம் கருத்தின்மையால் ஒழிந்தது!

பாவாணர் தொகைப் பயன் முற்றாகப் போகிவிடா வண்ணம் ஆங்காங்கு அவர்தம் நூல்களில் பொதிந்து கிடந்தலை அன்பர் திருமலி சி. பூ. மணி கண்டார்; கருதினார்; அதனைத் தொகையாக்கினால் பாவாணரின் பழமொழித் தொகையின் ஒரு பகுதியேனும் தமிழுலகு அடையுமே என்னும் தளிர்ப்பால் தொகுத்தார். அகர நிரலில் அடைவு செய்தார். அவர் தொண்டு பாராட்டுக் குரியது! பலப்பல இடங்களில் கிடக்கும் பழமொழி களைத் திரட்டிக் கோவையாக்கி ஓரிடத்து வைப் பாக்குதல் ஆய்வாளர்க்குப் பயனே அன்றோ!

பாவாணர் பழமொழிகளை உள்ளவாறே பயன் படுத்தியதுண்டு. கலப்புச்சொற் பழமொழி எனின் தமிழாக்கி வைத்ததுண்டு; தொல்லோர் நூலில் வரும் அடிகளைப் பழமொழியாக்கியதுண்டு; தாமே எதுகை மோனை நயமமையப் புத்தாக்கப் புனைவு செய்ததும் உண்டு. இயல்பான குறிப்பில் எழுதும் தொடரே பழமொழியாகிச் சிறப்பதும் உண்டு. இவ்வெல்லாமும் இத்தொகையைக் கண்ணுறுவார் நன்கு அறிவர்.

பாவாணர் ஆக்க வழியாக்கப் பணியில் ஈடுபட்டுத் தொகுத்து நூலாக்கித் தமிழுலாச் செல்லவிடும் அன்பர் சி. பூ. மணி, தம் பெயர்ப் பொருள் விளங்க 'ஒலி'யும் 'ஒளி'யும் 'புக'ழும் எய்திச் சிறக்க முயற்சி வெல்க!

அன்பன்

**இரா. இளங்குமரன்.**

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தமிழில் பழமொழிகள்

(பண்டாரகர் மா. இராசமாணிக்கனார்)

மாந்தரது அழுந்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து தோன்றுவதே பழமொழி என்பது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். அதாவது, மக்கள் தங்கள் நடைமுறைகளினின்று கண்டறிந்து மொழிந்த மொழிகளே பழமொழிகள் என்பது. இப்பழமொழிகள் இருவகைப் படும். அவற்றுள் ஒருவகையினை பொதுமக்களிடமிருந்து வருவன; அறிஞர் என்போர், மக்களால் போற்றப்பட்ட சமயத் தலைவர், துறவிகள் முதலியோர் கூறிய மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை உண்மைகள் இரண்டாம் வகையின. அவற்றைப் பொதுமக்கள் தாமே முயன்று கண்டறிய அறிவுத் திறனோ, நேரமோ போதாமையால் அல்லது வாய்க்காமையால், அப்படியே ஏற்றுக் கொண்டனர். எனவே அவை வாழ்க்கை நெறிகளாக அமைந்துவிட்டன.

இவ்விருவகைப் பழமொழிகளும் பொதுமக்களிடமிருந்து அறிஞரிடத்திலும், அறிஞரிடத்திலிருந்து பொதுமக்களிடமும் முதலில் பேச்சு வழக்கில் பரவுகின்றன. பேச்சு வழக்கில் மட்டும் இருந்தால் எல்லாப் பழமொழிகளும் மக்கள் நினைவில் இருப்பது அருமை. அவை நூல்களில் இடம் பெற்று விடுவதால் என்றும் இறவாமல் காக்கப்படுகின்றன. பண்டை மக்களால் பேசப்பட்ட

FREE E- BOOKS , www.thamizham.net.,

பழமொழிகள் நூல்களில் இடம் பெற்றுவிட்டமையால் நூல் வழக்கிலிருந்து பேச்சு வழக்கிற்கு வந்து கொண்டேயிருக்கின்றன. இங்ஙனம் பழமொழிகளை வாழ்விப்பதில் நூல்கள் மிகுந்த அளவு தொண்டு செய்கின்றன. (Oxford Dictionary of English Proverbs. Int. P. VIII.)

மக்களுள் உழவர், கைத்தொழிலாளர், கணியர், வேட்டுவர், மருத்துவர், உளநூல் ஆசிரியர் எனப் பல திறத்தோர் இருக்கின்றனர். இவ்வாறே மலைகளில் வாழ்பவர், வயல்வளப் பகுதிகளில் வாழ்பவர் என்பவரிடமிருந்து அவரவர் நிலத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் பழமொழிகள் அமையும். எனவே, இப் பல துறை மக்களுடைய வாழ்க்கை முறைகளிலிருந்து வெளிப்படும் பழமொழிகளே பலதுறைப் பழமொழிகளாக இருப்பதைக் காணலாம். உளநூல், அரசியல் சமயம், கல்வி, மருத்துவம், நட்பு, பிள்ளைவளர்ப்பு, சமையற்கலை முதலிய பல்வேறுபட்ட கலைகள் பற்றிய பழமொழிகளும் நாட்டில் நடமாடுகின்றன.

நன்றி : தென்மொழி.
(இயல். 1 இசை. 8)

FREE E- BOOKS , www.thamizham.net.,

"விந்தைநம் பாவாணர்
விளைத்த நூல் அத்தனையும்
வெற்றிமொழி யாட்சிக் கோலாம்." —ஐ.உ—

1 இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?
2 உயர்தரக் கட்டுரை இலக்கணம் I
3 உயர்தரக் கட்டுரை இலக்கணம் II
4 என் அண்ணாமலை நகர் வாழ்க்கை.
5 ஒப்பியன் மொழி நூல்.
6 கட்டுரை வரைவியல் என்னும் இடைத்தர கட்டுரை இலக்கணம்.
7 செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகர முதலி.
8 சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள்.
9 சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்.
10 தமிழர் மதம்.
11 தமிழர் வரலாறு.
12 தமிழ் இலக்கிய வரலாறு.
13 தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?
14 தமிழ் நாட்டு விளையாட்டுக்கள்
15 தமிழ் வரலாறு.
16 திரவிடத்தாய்.
17 திருக்குறள் தமிழ் மரபுரை.
18 பண்டைத் தமிழக நாகரிகமும் பண்பாடும்.
19 பழந்தமிழாட்சி.
20 மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடமை.
21 முதல் தாய்மொழி.
22 வடமொழி வரலாறு.
23 வண்ணனை மொழி நூலின் வழுவியல்
24 வேர்ச்சொல் கட்டுரைகள்.
25 'தென்மொழி' யில் வந்த கட்டுரைகள்.

விசையொடிந்த தமிழ் உயர்த்த
விரலசைத்துக்குரல் கொடுக்க
வேறிதுபோல் ஏடும் உண்டோ?

FREE E- BOOKS , www.thamizham.net.,

## மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்



தோற்றம் — 7-2-1902 மறைவு — 16-1-1981

### தன்மானப் பண்ணைக்குப் போர்க்கருவி
### தனித்தமிழை வாழ்விக்கும் தேனருவி

முப்பற்ற தமிழ்க்கன்னி முன்றானை அவிழ்ப்பவரைத்
தீப்பற்றச் செய்திறத்தான்; செழுந்தமிழன் பாவாணன்
காப்பற்ற தமிழ்க்காவைக் காப்பாற்றும் காவலன்காண்!

தமிழ்வாழத் தான்வாழும் தனித்தமிழன் தமிழ்நெஞ்சன்
தமிழ்ப்பகையின் தலைநெரிக்கும் தடந்தோளன் !
எழுத்தாளன்
தமிழமுதக் கிண்ணத்தைச் சாய்ப்பவரைச் சாய்ப்பவன்
காண்!

மணிப்பவள நடைபோட்டு மாத்தமிழைக் கொல்வாரை
தனித்தமிழ்ப்போர் வாள்கொண்டு சாகடித்துத்
தமிழென்னும்
கனித்தருவை நோக்கிவரும் கல்லடியைத் தடுப்பவன்
காண்!

உப்புக்கும் மிளகாய்க்கும் உயிர்த்தமிழை
அடகுவைக்கும்
தப்பிலிகள் தலைசாயச் சாடுகின்ற போர்மறவன்
ஒப்புக்குத் தாளமிடும் ஒன்னலர்க்குக் கூற்றுவன் காண்!

மூவேந்தர் கொண்டனைத்த முத்தமிழைப் பழிப்பாரின்
நாவறுத்துத் தமிழ்நிலத்தின் நடுகல்லாய் மாற்றுதற்குக்
காவாத்தீ நாக்கினரைக் கழுவேற்றும் தமிழ்வீரன்

வரும்படியை நினைத்தபடி வந்தபடி பிறமொழியைக்
கரும்பினடித் தனித்தமிழில் கலந்தபடி தீங்கிழைக்கும்
பெரும்படியார் இடுப்பொடிக்கும் பேச்சாளன்;
மாமறவன்

சோற்றுக்கு மண்டியிட்டுத் தூயதமிழ் மானத்தைக்
காற்றுக்குப் பஞ்சாக்கும் கயமையினைக் கான்றுமிழும்
பேற்றுக்குப் பெயர்தானே பெரும்புலவன் பாவாணன்

பந்திக்கு முந்திவந்து பல்லிளிக்கும் கூட்டத்தின்
இந்திக்குப் பாய்விரிக்கும் எத்துகளைக் கொண்டுவந்து
சந்திக்குச் சந்தியதைத் தகர்த்துவரும் கூர் அரிவாள்!

அன்னைக்கும் அன்புக்கும் அருந்தமிழ்க்கும் அல்லாது
பின்னெதற்கும் வணங்காத பெருவீரன், தன்மானப்
பண்ணைக்குப் போர்க்கருவி, பைந்தமிழின் தேனருவி!

புன்மொழியை வரவேற்கும் புலமையிலாப் புலவர்க்கு
நன்மொழிகள் எடுத்துரைத்து நலம்வளர்க்கும் சீராளன்
தென்மொழியின் தனித்தலைவன் திராவிடத்துப்
பெருமறவன்

— மலேசியப் பாவலர். ஐ. உலகநாதன்
(நன்றி :- சந்தனக் கிண்ணம்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

# பதிப்புரை

எமது உ.த.க பெங்களூர்க் கிளையின் ஒரு தூணாக இருந்துவரும் தோழர். திரு. சி. பூ. மணியவர்கள் பாவாணர்பாலும் அவர் தம் நூல்களின்பாலும் பெரும் காதல் கொண்டவர். எப்போதும் தனித்தமிழ் நெறியில் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் இணைத்து ஈடுபாடு கொள்ளச் செய்பவர். அவரது அரிய முயற்சியின் மூகிழ் மலராய் வெளிவரும் இச்சிறிய...சீரிய...நூல், பாவாணர் நூல்களினின்றும் தொகுத்தெடுக்கப்பட்டவை. அவரது பழமொழிகள் அனைத்தையும் ஒரு சேர கொணர இவர் எடுத்துக்கொண்ட இப்பணியை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பொன்மொழிக் கேற்ப தமிழ்கூறும் நல்லுலகிற்கு படைத்து மகிழ் கின்றோம். ஏனைய எமது பதிப்புகட்கு ஊக்கமளித்து உதவி வரும் தமிழ்நெஞ்சங்கள் இச்சிறிய படைப்புக்கும் ஊக்கம் அளிப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

நாள்:- தி.பி. 2020-அ-கஉ.
(கி.பி. 1990-8-28)

இங்ஙனம்.

க. அரசு. (அமைப்பாளர்)

கருநாடக உலகத் தமிழ்க் கழகம்
பெங்களூர். 560021.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# என்னுரை

கொற்றவர் தனித்தமிழை விற்றவர் குலைநடுங்க
கோடையிடி யாய்இழந்த வான்:- ஆம்...

செந்தமிழ் ஞாயிறு, சிந்தனைச் சோலை, தனித் தமிழ்க்கோ, பெருஞ்சொல்லாக்கன் பாவாணரின் நூல்களைப் படித்தபோது இனிய பழமொழிகள் பல கண்டேன். களித்தேன். அவற்றையெல்லாம் தொகுத்து நூலாக வெளியிட வேண்டுமென்ற ஆவல் என்னுள் பல்கிப் பெருகியது. அதன் விளைவுதான் இச்சிறிய தொகுப்பு.

பாவாணர் தம் நூல்களில் பயன்படுத்திய எல்லா பழமொழிகளையும் முடிந்த அளவு தொகுத்திருக்கின்றேன். ஏதேனும் விடுபட்டு போயிருக்குமாயின் தமிழன்பர்களும் அறிஞ பெருமக்களும் சுட்டிக் காட்டினால் பின்வரும் பதிப்புகளில் இணைத்துக் கொள்வதோடு நன்றியுடையவனாவேன்.

இச் சிறிய முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்துதவிய தோழமை மிகுந்த சான்றோர்களாகிய பாவலரேறு, பெருஞ்சித்திரனார், இலக்கியச் செம்மல், இளங்குமரனார், கவிவாணர் அய். உலகநாதன், வழக்கறிஞர் தி. கிள்ளிவளவன், தென்மொழி அருள்மணி, க. அரசு, கி.சு. இளங்கோவன், சி. பசுமலை, ப. திருநாவுக்கரசு, அ. மூர்த்தி, தங்கவயல் வெற்றிச்செல்வன், கோ.வி. பாவேந்தன், ப. அரசு, தமிழோசை அச்சகத் தொழிலாளத் தோழர் அனைவர்க்கும் எனது நன்றியும் வணக்கமும் என்றென்றும் உரியதே.

குற்றங்களிருப்பினும் ஆன்றோர் பொறுத்தல் அவர் கடனென்பேன். பாறையிலும் பயிர்வளர்க்கும் பாவாணர் தமிழ்வெள்ளம் பாயாமல் ஓயமாட்டோம்.

நாள்: தி.பி. உ0உக. மடங்கல் கஉ

கி.பி. (28. 08. 1990)

இவண்
**சி. பூ. மணி.**

FREE E- BOOKS , www.thamizham.net.,

# அ

1 அஃகமுங் (1/12) காசும் சிக்கெனத் தேடு

2 அகங்காரம் உள்ளவர்க்கு ஆண் பிள்ளை
புண்ணியம் செய்தவர்க்குப் பெண் பிள்ளை

3 அகங் குளிர்ந்தால் அஞ்சுங் குளிரும்

4 அகங் குறைந்தால் அஞ்சுங் குறையும்

5 அகம் மலிந்தால் அஞ்சும் மலியும்

6 அகம் ஏறச் சுகம் ஏறும்

7 அகம் அங்கே ஆக்கை (யாக்கை) இங்கே

8 அகதி சொல் அம்பலம் ஏறாது

9 அகதி பெறுவது பெண் பிள்ளை, அதுவும் வெள்ளி பூராடம்

10 அகத்தி ஆயிரங் காய்த்தாலும் புறத்தி புறத்தியே

11 அகப்பட்டதைச் சுருட்டடா கம்பளியப்பா

12 அகப்பட்டுக் கொள்வேன் என்றா கள்வன் களவெடுக்கிறது ?

13 அகப்பை அறுசுவை அறியுமா ?

14 அகப்பை குறைத்தால் கொழுப்பெல்லாம் அடங்கும்.

15 அகப்பை பிடித்தவன் தன்னவனானால், அடிப்பந்தியில்
இருந்தாலென்ன, கடைப் பந்தியில் இருந்தாலென்ன ?

FREE E- BOOKS , www.thamizham.net.,

16 அகராதி படித்தவன் அஞ்சிப் பேசுவானா ?

17 அகராதி படித்தவனுக்கு எதிராகப் பேசாதே

18 அகராதி படித்து விட்டால் அடக்கமின்றிப் பேசுவதா ?

19 அகல உழுகிறதை விட, ஆழ உழுகிறது மேல்

20 அகலக் கால் வைக்காதே

21 அகல இருந்தால் பகையும் உறவாம்

22 அகல இருந்தால் நிகள (பந்தம்) உறவு

23 அகல இருந்தால் புகல (துணை) உறவு

24 அகலவன் (பாணன்) பண்பாட அது கேட்டுப்பெண் பாட

25 அகல் வட்டம் பகல் மழை

26 அகவிலை (கூலம்) ஏறினால் அவளுக்கென்ன ?
அகமுடையான் இருக்கின்றான் தேடிப் போட

27 அகவிலை தெரியாது அவள் பேச்சும் புரியாது

28 அகவிலையால் திண்டாடும் போது,
வைர அட்டிகை கேட்டாளாம்

29 அகவிலை அறியாதவன் துக்கம் அறியான்

30 அகழிவாய் முதலை போல் வாயைப் பிளக்கிறான்

31 அகழியிலே விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம்

32 அக்கம் பக்கம் பார்த்துப் பேசு.

33 அக்கச்சி யுடைமை அரிசி, தங்கச்சி யுடைமை தவிடா ?

34 அக்கரைப் பாகலுக்கு இக்கரைக் கொழு கொம்பா ?

35 அக்கவிலை அறியாதவன் துக்கம் அறியான்

36 அக்காடு வெட்டிப் பருத்தி விதைக்கிறேன் என்றான், அப்பா !
எனக்கொரு துப்பட்டி என்றான் பிள்ளை, அதற்குச் சீ !

FREE E- BOOKS , www.thamizham.net.,

கைகால் பட்டுக் கிழியப் போகிறது, மடித்துப் பெட்டியிலே வை என்றான் அப்பன்

37 அக்காளைப் பழித்துத் தங்கை அலவை (அபசாரி) ஆனாள்

38 அக்கை உறவும் அத்தான் பகையுமா ?

39 அங்கங்கு குறுணி (8 படியளவு) அளந்து கொட்டிக் கிடக்கிறது

40 அங்காடி மேயும் பழங்கன்று ஏறாதலும் உண்டு

41 அங்காடி விலையால் எங்கோடிப் போனாளோ ?

42 அங்காடி விலையை (கூடையை) அதிர அடிக்காதே

43 அங்காடிக்காரியை சங்கீதம் பாடச் சொன்னால்
வெங்காயம், கறிவேப்பிலை என்பாள்

44 அங்கிடு திருப்பி (பொய்யன்) எங்கடி போனாய்?
சின்னண்ணன் செத்த இழவுக்குப் போனேன்

45 அங்கிடு தொடுப்பிக்கு (பொய்யன்) அங்கிரண்டு குட்டு
இங்கிரண்டு குட்டு

46 அங்கும் இருப்பான் இங்கும் இருப்பான்
ஆக்கின சோற்றுக்குப் பங்கும் இருப்பான்

47 அங்கும் தம்பி இங்கும் தம்பி
அகப்பட்டுக் கொண்டான் தும்மட்டிப் பட்டன்

48 அங்கும் ஊதி, இங்கும் ஊதி, அடுப்பூதி

49 அங்கே கண்டான் இங்கே செய்கிறான்

50 அங்கேண்டி மகளே கஞ்சிக்கு அழுகிறாய் ?
இங்கே வாடி காற்றாய்ப் பறக்கலாம்

51 அசல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி கிடப்பாள்

52 அசல் வீட்டு விளக்கை மூச்சு விட்டு அணைப்பாள்

FREE E- BOOKS , www.thamizham.net.,

53 அசலார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறது

54 அசைந்து தின்கிறது மாடு, அசையாமல் தின்கிறது வீடு

55 அசைவிருந்தால் (உணகை) விட்டுப் போக மாட்டான்

56 அச்சமற்றவன் அம்பலம் ஏறுவான்

57 அச்சம் ஆண்மைக் குலைக்கும்

58 அச்சாணி இல்லாத் தேர் முச்சாணும் ஓடாது

59 அச்சியிலே (மேலைநாடு) போனாலும் அகப்பை அரைக்காசு

60 அச்சியிலும் பிச்சைக்காரன் உண்டு

61 அச்சி என்றால் உச்சி குளிருமா ?
அமுவணம் என்றால் கை சிவக்குமா ?

62 அச்சில்லாத் தேர் ஓடவும், அகமுடையான் இல்லாதவள் பிள்ளை பெறவும் கூடுமா ?

63 அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடையாது

64 அஞ்சிலே பிஞ்சிலே அறிய வேண்டும்

65 அஞ்சி அஞ்சி வாழ்வதை விட அஞ்சாமல சாவது மேல்

66 அஞ்சி ஆண்மை செய்ய வேணும்

67 அஞ்சிலே பிஞ்சிலே அடித்து வளர்க்க வேண்டும்

68 அஞ்சிலே பிஞ்சிலே கொஞ்சாமல்,
அறுபதிற்கு மேல் கொஞ்சினானாம்

69 அஞ்சிலே பழுத்து ஆறிலே விழுந்தான்

70 அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா ?

71 அஞ்சினவனுக்கு அகப்பைக் கணையும் பேய்

72 அஞ்சினவன் கண்ணிற்கு ஆகாயமெல்லாம் பேய்

73 அஞ்சினவனைக் குஞ்சும் விரட்டும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

74 அஞ்சுக் காசுக்குக் குதிரையும் வேண்டும்—அது
ஆற்றைக் கடக்கப் பாயவும் வேண்டும்

75 அஞ்சு புலன் அடங்கினால் அகிலமும் அடங்கும்

76 அஞ்சும், மூன்றும் உண்டானால்,
அறியாப் பெண்ணும் கறியாக்கும்

77 அஞ்சுரு ஆணியில்லாத் தேர் அசைவதரிது

78 அடக்கமற்ற பெண் அவிந்து போன கண்

79 அடக்கமே அறிவுக்கு வித்து

80 அடக்கம் ஆயிரம் பொன் தரும்

81 அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்

82 அடக்கு வாரற்ற கழுக்காணி (அறிவிலி)
அடக்கு வாரின்றேல் ஆமையும் தாவும்

83 அடங்காப் பிடாரியைக் கொண்டவனும் கெட்டான்,
அறுகங் காட்டை உழுதவனும் கெட்டான்

84 அடப்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு

85 அடர விதைத்து ஆழ உழு

86 அடர்த்தியை அப்போதே பார், புழுக்கத்தை பின்னாலே பார்

87 அடவி (காடு) சென்றும் விறகுக்குப் பஞ்சமா?

88 அடாது செய்பவர் படாது படுவர்.

89 அடி அதிரசம், குத்து கொழுக்கட்டை

90 அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவார்

91 அடி ஒட்டையா யிருந்தாலும்—கொழுக்கட்டை வேக வேண்டியது தானே?

92 அடி என்கிற மந்திரியு மில்லை
பிடி என்கிற அரசனு மில்லை

FREE E- BOOKS , www.thamizham.net.,

93 அடிக்கிற புயலைத் தடுக்க முடியுமா?
94 அடிக்கும் ஒருகை அணைக்கும் ஒருகை
95 அடிச் சட்டிக்குள்ளே கரணம் போடலாமா?
96 அடிச்சிக்கு (அடியவள்) ஆசை அரசன் மீது
97 அடிச் சுவடு கொண்டு கள்வனைப் பிடிக்கலாம்
98 அடித்தது ஆட்டம், பிடித்தது பெண்டு (பெண்)
99 அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமுமா?
100 அடி பொறுத்தாலும் வசவு பொறுக்க முடியாது
101 அடிப்பும் அணைப்புமா இருக்கவேண்டும்
102 அடியற்ற மரம்போல் அலறி விழுகிறது
103 அடியற்றால் நுனி விழாமல் இருக்குமா?
104 அடிவானம் கருத்தால் அப்பொழுதே மழை
105 அடியென்று அழைக்கப் பெண்டாட்டியில்லை—ஆண்பிள்ளை எத்தனை, பெண்பிள்ளை எத்தனை என்கிறான்
106 அடுக்களைப் பூனைபோல் இடுக்கிலே ஒளிக்கிறது
107 அடுக்கிளைக் கிணற்றிலே அமுதம் எழுந்தாற் போல்
108 அடுக்களைப் பெண்ணுக்கு அழகு வேண்டுமா?
109 அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியுமா?
110 அடுத்த வீட்டுக்காரி பிள்ளை பெற்றாளென்று அம்மிக் குழவி எடுத்து குத்திக் கொண்டாளாம்
111 அடுத்தடுத்துச் சொன்னால் தொடுத்த காரியம் முடியும்
112 அடுத்தவரைக் கெடுக்கலாமா?
113 அடுத்து வந்தவர்க்கு ஆதரவு சொல்வோன் குரு
114 அடுத்துக் கெடுப்பான் கபடன், தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை

FREE E- BOOKS , www.thamizham.net.,

115 அடுத்து முயன்றாலும் ஆகும் நாள்தான் ஆகும்

116 அடுப்பங் கட்டிக்கு அழகு வேண்டுமா?

117 அடுப்பு மூன்றானால் அம்மா பாடு திண்டாட்டம்.

118 அடுப்பு எரிந்தால் பொரி பொரியும்.

119 அடுப்பு நெருப்பும் போய், வாய்த்தவிடும் போச்சு.

120 அடைக்கலங் குருவிக்கு ஆயிரத்தெட்டுக் கண்டம்

121 அடைக்கலம் என்று வந்தவன் படைக்கலம் எடுக்கிறான்

122 அடைத்தவன் காட்டைப் பார், மேய்த்தவன் மாட்டைப் பார்

123 அடைந்தோரை ஆதரி.

124 அடைப்பட்டுக் கிடக்கிறான் செட்டி—அவனை அழைத்து வா பணம் பாக்கி என்கிறான் பட்டி

125 அடைப்பைப் பிடுங்கினால் பாம்பு கடிக்கும்

126 அடை மழைக்குக் குடைஇல்லாதவனுக்கு, ஐந்து பெண்டாட்டியாம்.

127 அடை மழையில் நாற்று நட்டால் ஆற்றோடு போகும்

128 அடை மழை விட்டும், செடி மழை விடவில்லை.

129 அடையலும் விடியலும் குருடருக்கில்லை.

130 அடையலரை அடுத்து வெல்லு

131 அட்டிகைக்கு ஆசை வைத்து எருமைச் சங்கிலியைக் கட்டிக் கொண்டாளாம்...

132 அட்டைக்கும் குட்டைக்குந்தான் உறவு—அதில் விழுந்த எருமைக்கு என்ன உறவு?

133 அட்டை செத்தால் குட்டைக்கு நட்டமா?

134 அட்டையைப் பிடித்து மெத்தையிலே வைத்தது போல

FREE E- BOOKS , www.thamizham.net.,

135 அணி பூண்ட நாய் போல

136 அணி யெல்லாம் ஆடையின் பின்

137 அணில் கொப்பிலும் (மரக்கிளை), ஆமை கிணற்றிலும்

138 அணில் நெட்டியா தென்னை சாயும்?

139 அணில் பிள்ளைக்கு நுங்கு அரிதோ?
ஆண்டிச்சி பிள்ளைக்குச் சோறு அரிதோ?

140 அணில் பிள்ளையின் தலை மீது
அம்மிக் கல்லை வைத்தது போல

141 அணு அளவு இலாபத்திலும் அரைப் பங்கு பாழ்.

142 அணு மாமேரு ஆகுமா?

143 அணுவும் மலையாச்சு, மலையும் அணுவாச்சு

144 அணை கடந்த வெள்ளத்தை மறிப்பவர் யார்?

145 அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது

146 அணை கட்ட இறங்கி ஆற்றோடு போய்விட்டான்

147 அண்டத்தைச் சுமக்கிறவனுக்குச் சுண்டைக்காய் பாரமா?

148 அண்ட நிழலில்லாமல் போனாலும் ஒண்ட அடியுண்டு

149 அண்டர் எப்படியோ தொண்டரும் அப்படியே

150 அண்டை வீட்டுக் கடனும், பிட்டத்துச் சிரங்கும் ஆகாது

151 அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி

152 அண்டை வீடு அடுத்த வீடு பகையா யிருக்கக்கூடாது

153 அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போகுமா?

154 அண்ணனுக்குப் பெண் பிறந்தால் அத்தை அயல் நாட்டாள்

155 அண்ணன்தான் கூடப்பிறந்தான்
அண்ணியுமா கூடப் பிறந்தாள்?

FREE E- BOOKS , www.thamizham.net.,

156 அண்ணாக்கும் தொண்டையும் அதிர அடைத்தது

157 அண்ணாமலையாருக்கு அறுபத்து நான்கு பூசை
ஆண்டிகளுக்கு எழுபத்து நான்கு பூசை.

158 அண்ணாமலையார் அருளுண்டானால்,
மன்னார் சாமி வம்பா செய்யும்?

159 அண்ணாவி (ஆசிரியர்) தான் செத்தார்—அவர்
சொல்லிக் கொடுத்த பாடமுமா செத்தது?

160 அண்ணாவி விழுந்ததும் ஓர் அடவுதான்

161 அதட்டிப் பேசினால் உண்மை அழிந்தா போகும்?

162 அததற்கு ஒரு கவலை அய்யாவுக்கு எட்டுக்கவலை.

163 அதிக ஆசை அதிக நட்டம்

164 அதிகக் கரிசன மானாலும் ஆமுடையானை
அப்பா என்று அழைக்கிறதா?

165 அதிகாரம் இல்லாவிட்டால் பரியாரம் வேண்டும்

166 அதிகாரியுடனே எதிர் பண்ணலாமா?

167 அதிகாரியும் தலையாரியும் ஒன்றானால்
விடியுமட்டும் திருடலாம்

168 அதிகாரி வீட்டில் திருடித் தலையாரி வீட்டில் வைத்ததுபோல

169 அதிகாரி வீட்டில் கோழி முட்டை
குடியானவன் வீட்டு அம்மியை உடைத்ததாம்

170 அதிகாலை எழாதவன் வேலை அழுதாலும் தீராது

171 அதிர அடித்தால் உதிர விளையும்

172 அதிர ஆடிக் குடியைக் கெடுத்தாள்.

173 அது முன்றே முக்கால் நாழிகை வாழ்வு

174 அது இறைவனுக்குத்தான் தெரியும்

175 அத்தனையும் நேர்ந்தாள் உப்பிட மறந்தாள்

176 அத்திக்காயைப் பிட்டுப் பார்த்தால் அங்குமிங்கும் பொள்ளல்

177 அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு

178 அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அதற்குள்ளும் விதையிருக்கும்

179 அத்திப் பூவை ஆர் அறிவார்?

180 அத்திப் பூவைக் கண்டவர் உண்டா?
ஆந்தைக் குஞ்சைப் பார்த்தவர் உண்டா ?

181 அத்தி பூத்தாற் போல.

182 அத்தி மரத்தில் தொத்திய கனிபோல்

183 அத்து மீறிக் கத்தாதே

184 அத்து மீறிப் போனான், பித்துக் கொள்ளி ஆனான்

185 அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா எனலாம்

186 அத்தை மகளானாலும சும்மா வருமா ?

187 அத்தை மகள் சொத்தை, அவள் கேட்கிறாள் மெத்தை

188 அத்தைத்தான் சொல்வானேன், வாயைத்தான் வலிப்பானேன்

189 அத்தைப் பாட்டிபோல அளந்து கொட்டுகிறாள் பெரிதாக

190 அத்தோடே நின்றது அலைச்சல்
கொட்டோடே நின்றது குலைச்சல்

191 அந்த வெட்கக் கேட்டை ஆரோட சொல்கிறது ?

192 அந்தி ஈசல் அடைமழைக்கு அறிகுறி

193 அந்தி ஈசல் பூத்தால் அடைமழை அதிகரிக்கும்

194 அந்தி மழை அழுதாலும் விடாது

195 அந்தி மழையும் விடாது —அவ்வையாரைப்
பிடித்த பிணியும் விடாது

FREE E- BOOKS , www.thamizham.net.,

196 அந்துக்கண்ணி (புளிச்சைக்கண்ணி)க்கு அழுதாலும்
வாரான் அகமுடையான்

197 அந்தூது நெல்லானேன்

198 அப்பச்சி குதம்பையைச் சூப்ப—பிள்ளை
முற்றின தேங்காய்க்கு அழுகிறது போல

199 அப்பச்சி கோவணத்தைப் பருந்து கொண்டு ஓடுகிறது,
பிள்ளை வீராவாளிப் பட்டுக்கு அழுகிறது

200 அப்படிச் சொல் வழக்கை, அவன் கையில் கொடு உழக்கை

201 அப்படிப் பார்த்தாலும் விகடகவி
இப்படிப் பார்த்தாலும் விகடகவி

202 அப்பத்தை எப்படிச் சுட்டாளோ ?
தித்திப்பை எப்படி நுழைத்தாளோ ?

203 அப்பம் என்றால் பிட்டுக் காட்ட வேண்டுமா ?

204 அப்பம் சுட்டது சட்டியில், அவல் இடித்தது திட்டை
(உரல்)யில்

205 அப்பன் அருமை அப்பன் மாண்டால் தெரியும்
உப்பின் அருமை உப்பு இல்லாவிட்டால் தெரியும்

206 அப்பன் செத்தும் தம்பிக்கு அழுகிறதா ?

207 அப்பன் மரித்தால் அந்தத் துணி எனக்கு

208 அப்பனில்லாதது அரட்டை, தாயில்லாதது தறுதலை

209 அப்பா என்றால் உச்சி குளிருமா ?

210 அமெரிக்கை (ஆறுதல்) ஆயிரம் பெறும்

211 அமைதி வேண்டுமெனில் அமருக்கு அணியமாயிரு
(ஆங்கிலம்)

212 அம்பலக் கழுதை அம்பலத்தில் கிடந்தாலென்ன ?
அடுத்த திருமாளிகையில் கிடந்தாலென்ன ?

FREE E- BOOKS , www.thamizham.net.,

213 அம்பலத்தில் கட்டுச்சோறு அவிழ்க்கலாகாது
214 அம்பலத்தில் பொதி அவிழ்க்கலாகாது
215 அம்பலத்திலேறும் பேச்சை அடக்கம் பண்ணப் பார்க்கிறான்
216 அயோக்கியர் அழகு அபரஞ்சிச் சிமிழில் நஞ்சு
217 அரச மரத்தைச் சுற்றி வந்ததும்,
அடி வயிற்றைத் தொட்டுப் பார்த்தாளாம்
218 அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்
219 அரசனில்லா ஊர் அச்சில்லாத் தேர்
220 அரசனில்லாத நாடு அகமுடையான் இல்லாத வீடு
221 அரசன் முத்தினால் அரம்பை
222 அரசன் வழிப்பட்டது அகலிடம் (அவனி)
223 அரணை கடித்தால் மரணம்
224 அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்
225 அரண்மனைக் கோழிமுட்டை அம்மியை உடைக்கும்
226 அரவம் அரவம் அறியும்
227 அரிசி அள்ளக் குறையும், அவல் முள்ளக் குறையும்
228 அரிசி உழக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்
229 அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயில் மண்ணு
230 அரைச்சொல் கொண்டு அம்பலம் ஏறலாமா ?
231 அவரவர் அக்கறைக்கு அவரவர் பாடுபடுவார்
232 அவரவர் அக்கறைக்கு அவரவரே பாடுபட வேண்டும்
233 அவரவர் பெற்ற பிள்ளை அவரவர்க்குப் பெரிது
234 அவரைக்கு ஒரு கொடியும் அகம்க்குபடி ஒரு குடியும் போதும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

235 அவரை போட்டால் துவரை முளைக்குமா ?

236 அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறதா ?

237 அவலை முக்கித் தின், எள்ளை நக்கித் தின்

238 அவல் அவல் என்கிறது நெல், மழை மழை என்கிறது புல்

239 அவல் பெருத்தது ஆர்க்காடு

240 அவனன்றி ஓரணுவும் அசையாது

241 அழ அழச் சொல்லுவார் தமர்
சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறர்

242 அழுகிற ஆடவனையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பக்கூடாது

243 அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்

244 அறக் கூர்மை முழு மொட்டை

245 அறச் செட்டு முழு நட்டம்

246 அறத்திற்கு (புண்ணியம்)க் கொடுத்த மாட்டை, பல்லைப் பிடித்துப் (பதம்) பார்க்கிறதா ?

247 அறுக்கப் பொறுக்கப் பாடுபட்டும் குடிக்கக் கஞ்சியில்லை

248 அறுக்கப் பொறுக்கப் பாடுபட்டும் படுக்கப் பாயில்லை

249 அன்றெழுதினவன் அழித்தெழுதான்

250 அன்னநடை நடக்கப் போய்த் தன்னடையுங் கெட்டது போல

251 அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்

252 அன்று என்பது ஆறு மாதம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஆ

1 ஆகாத மாமியாருக்குக் கை பட்டால் குற்றம்
கால்பட்டால் குற்றம்

2 ஆக்கம் பலவுந் தரும்

3 ஆசை வெட்கம் அறியாது

4 ஆடமாட்டாத தேவடியாள் கூடங் கோணல் என்றாளாம்

5 ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்,
பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்

6 ஆடிப் பட்டம் தேடி விதை

7 ஆடி மாதம் அவரை போட்டால், கார்த்திகை மாதம் காய்

8 ஆடு கொழுத்தால் ஆயனுக்கு ஊதியம்

9 ஆடு மறித்தவன் செய்(வயல்) விளையுமா,
அங்கலாய்த்தவன் செய் விளையுமா ?

10 ஆடை யில்லாதவன் அரை மாந்தன்,
கல்வி யில்லாதவன் கால் மாந்தன்

11 ஆட்டுக்கும் வால் அளந்துதான் வைத்திருக்கிறான்

12 ஆணுக்கு அறிவு பெண்ணுக்கு அழகு

13 ஆண்டான் கூலியைக் குறைத்தால்,
அடிமை வேலையைக் குறைப்பான்

14 ஆண்டி எப்பொழுது சாவான், மடம் எப்பொழுது ஒழியும் ?

15 ஆண்டிகள் கூடி மடங் கட்டினாற் போல

16 ஆண்மையும் முயற்சியும் உள்ளவனுக்கு
அரசும் தஞ்சம் (எளிமை)

17 ஆபத்திற்குப் பாவமில்லை

FREE E- BOOKS , www.thamizham.net.,

18 ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கும் உண்டு
19 ஆமணக்கு நட்டால் ஆச்சா வாகுமா ?
20 ஆமை மயிர்க்கயிற்றால் கொம்புக் குதிரையை
கட்டினது போல.
21 ஆயத்திற்கு அஞ்சி ஆற்றில் நீந்தினது போல்.
22 ஆயிரங் காலத்துப் பயிர்
23 ஆயிரம் உடுக்கள் (விண்மீன்) சேர்ந்தாலும்
ஒரு திங்களுக்கு நிகராகுமா ?
24 ஆயிரம பாட்டிற்கு அடி தெரியும்
ஒரு பாட்டிற்கும் உரு தெரியாது
25 ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை மருத்துவன்
26 ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை மருத்துவன்
27 ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
28 ஆரை நம்பினாலும் அரங்கியை (நடனக்காரி)
நம்பக் கூடாது.
29 ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி,
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
30 ஆல் பழுத்தால் அங்கே, அரசு பழுத்தால் இங்கே
31 ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே
32 ஆழியை நாழி கொண்டு அளப்பது போல
33 ஆளப்படுகிறவனே ஆளத்தெரிந்தவன்
34 ஆளன் இல்லாத துக்கம் அழுதாலும் தீராது
35 ஆளைக் கண்டு ஏய்க்குமாம் ஆலங்காட்டுப் பேய்
35A ஆர அமரக் காரியம் செய்ய வேண்டும்
36 ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு
37 ஆறின புண்ணினும் அசறு (பொருகு) நிற்கும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

38 ஆறு கடக்கு மட்டும் அண்ணன் தம்பி என்கிறான், அதற்குப் பின் நீ யார் நான் யார் என்கிறான்

39 ஆறு நிறைய நீர் போனாலும்—நாய் நக்கித்தான் குடிக்க வேண்டும்

40 ஆற்றிலே போகிறதை ஐயா குடி அம்மா குடி

41 ஆற்றில் ஒருகால், சேற்றில் ஒருகால்

42 ஆனி முற்சாரல், ஆடிஅடைசாரல்

43 ஆனைக்கும் அடி சறுக்கும்

44 ஆனைக்கும் பானைக்கும் சரியாய்ப் போய்விட்டது

45 ஆனைக் கொன்றான் என்னும் மலைப்பாம்பு—ஓர் யானை முழுவதையும் விழுங்கினாற் போல

46 ஆனை துரத்தி வந்தாலும் ஆனைக்காவில் நுழையாதே

47 ஆனை முகவரைப் பிடித்த சனி, அரச மரத்தையும் பிடித்தது போல்

48 ஆனை முகவனுக்கு அவல்கடலை கொண்டாட்டம்

49 ஆனை யிருந்தாண்ட இடத்தில், பூனையிருந்து புலம்பி அழுகிறது

50 ஆக்கமும் கேடும் அனைவர்க்கும் உண்டு

## இ

1 இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

2 இஞ்சி தின்ற குரங்கு போல

3 இடம் பொருள் ஏவல்

FREE E- BOOKS , www.thamizham.net.,

4 இடுகிறவன் தன்னவனானால் அடிப்பந்தியில் இருந்தாலென்ன, கடைப்பந்தியில் இருந்தாலென்ன ?

5 இடும்புக்குத் தின்றால் உடம்புக்குப் பலம்

6 இடையனில் ஆண்டியும் இல்லை, குயவனில் காதனும் இல்லை

7 இட்டது சட்டம், வைத்தது வரிசை

8 இத்தனை அத்தனையானால், அத்தனை எத்தனை யாகும்?

9 இரப்பாரின்றி ஈவாரில்லை

10 இருக்கும் பிள்ளை மூன்று, ஓடும் பிள்ளை மூன்று, பறக்கும் பிள்ளை மூன்று

11 இருதலைக் கொள்ளி எறும்பு போல

12 இருதலைக் கொள்ளி எறும்பு போல் இடர்ப்படுபவனுக்கு இன்பம் ஏது ?

13 இருந்தவன் எழுமுன் நின்றவன் நெடுந்தொலைவு

14 இருந்தால் பூனை, எழுந்தால் புலி

15 இருப்பது பொய், இறப்பது மெய்

16 இரும்படிக்கிற இடத்தில் ஈய்க்கு என்ன வேலை ?

17 இரு வீட்டிற்கு ஒரு முற்றம்

18 இலை மறை காய் போல்

19 இல்லாது பிறவாது, அள்ளாது குறையாது

20 இவ்வழி போனால் நாய், அவ்வழி போனால் முள்

21 இளங்கணியன் (சோதிடன்), முது மருத்துவன்

22 இறைக்கிற கிணறு ஊறும், இறைக்காத கிணறு நாறும்

23 இனம் இனத்தோடு சேரும்



FREE E- BOOKS , www.thamizham.net.,

24 இனம் இனத்தோடே, வெள்ளாடு தன்னோடே

25 இனத்தை இனம் தழுவும்

## ஈ

1 ஈகையின்றி ஈவாரில்லை.

2 ஈட்டி எட்டியவரை பாயும், பணம் பாதாளம் வரை பாயும்

3 ஈயாத புல்லர் இருந்தென்ன, போயென்ன ?

## உ

1 உடையவன் போகா வேலை ஒரு முழங்கட்டை

2 உண்டவன் வாழ்வான், உண்ணாதவன் சாவான்

3 உண்ட வீட்டிற்கு இரண்டகம் பண்ணுகிறதா ?

4 உண்பாடின்றேல் பண்பாடில்லை

5 உண்மை உயர்வளிக்கும்

6 உதட்டில் உறவும் உள்ளே பகையும்

7 உதி(ஒதிய மரம்) பெருத்தால், உத்திரத்திற்கு ஆகுமா ?

8 உதிரம் உறவறியும்

9 உப்பிட்டவரை உள்ளளவும் நினை

10 உப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தி போல

11 உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?

12 உயிர் போனாலும் உள்ளதைச் சொல்லமாட்டான்

13 உரு ஏறத் திரு ஏறும்

14 உரோமை நகரிலிருக்கும்போது, உரோமரைப் போல் நடந்துக்கொள் (ஆங்கிலம்)

15 உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே

16 உலக்கை தேய்ந்து உளிப் பிடியானது போல

FREE E- BOOKS , www.thamizham.net.,

17 உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது

18 உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்

19 உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்குப் பொல்லாப்பு

20 உற்று நோக்கி ஊகித்தறி

21 உற்றோரெல்லாம் உறவினர் அல்லர்

22 உன் கண்ணில் உத்தரம் இருக்கும் போது
பிறர்கண்ணிலுள்ள துரும்பைப் பாராதே

23 உண்டு உடுத்து வாழவேண்டும்

## ஊ

1 ஊக்கம் ஒன்பது ஆளை அடிக்கும்

2 ஊதாரிக்குப் பொன் துரும்பு

3 ஊமையன் கண்ட கனா போல

4 ஊமை வாயனுக்கு உளறுவாயன் மேல்

5 ஊரார் உடைமைக்குப் பேயாய் திரிகின்றான்

6 ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை
தானே வளரும்

7 ஊரிலே கல்யாணம், மாரிலே சந்தனம்

8 ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி

9 ஊருக்கு ஓமல் வீட்டுக்கு வயிற்றெரிச்சல்

10 ஊருக்குழைத்து ஊதாரியானான்

11 ஊருடன் கூடி வாழ்

12 ஊரெங்கும் பேர் வீடு பட்டினி

13 ஊர்வாரியிலுள்ள கொல்லையும், உத்திரட்டாதியில்
பிள்ளையும்

14 ஊழுக்குக் கூத்தன், கூழுக்கு அவ்வை
15 ஊதியமும் இழப்பும் வணிகத்திற்கு இயல்பு.

## எ

1 எச்சிற் கையால் காக்கை விரட்டாத கஞ்சன்
2 எடுப்பார் கைப் பிள்ளை
3 எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடுவது போல
4 எட்டினால் முடி, எட்டாவிட்டால் அடி
5 எண்ணத் தொலையாது ஏட்டிலடங்காது
6 எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேற்படும் (ஆங்கிலம்)
7 எத்தால் வாழலாம் ? ஒத்தால் வாழலாம்
8 எந்நிலத்தில் விதைத்தாலும் எட்டிக் காய் தெங்காகாது
9 எமன் ஏறுகிற கடாவிருந்தாலும் உழுது விடுவான்
10 எய்தவன் இருக்க அம்பை நோவானேன் ?
11 எரிக்கும் நெருப்போடு காற்றுங் கூடியது போல்
12 எருது கொழுத்தால் தொழுவத்தில் இராது
13 எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்
14 எலி வளையுந் தனிவளை, தனிவளையும் தன் வளை
15 எலும்பு கடிக்கிற நாய்க்குப் பருப்புஞ் சோறும் ஏன் ?
16 எலும்பை கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா ?
17 எல்லாத் தொழிலும் ஒருசாண் வயிற்றிற்கே
18 எல்லோரும் பல்லக்கில் ஏறினால், எவர் பல்லக்குத் தூக்குவது ?
19 எளியோரை வலியோர் வாட்டினால்,
வலியோரைத் தெய்வம் வாட்டும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

20 என் பாட்டன திருமணத்திற்கு—நான்
பாட்டுக் கட்டினேன் என்பது போல

21 என் வீட்டிற்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய் ?
உன் வீட்டிற்கு வந்தால் என்ன கொடுக்கிறாய் ?

22 என்றைக்கும் எல்லோரையும் ஏமாற்ற முடியாது ? (ஆங்கிலம்)

23 என்னடியம்மா தெற்கத்தியாள் எந்நேரம் பார்த்தாலும்
நொள்ளைக் காது

24 எருமை மாட்டின் மேல் எத்தனை சூடு இருந்தாலும் தெரியாது
பசு மாட்டின் மேல் ஒரு சூடு இருந்தாலும் தெரியும்

## ஏ

1 ஏமாற்று வாழ்வு நீடிக்காது

2 ஏலேல சிங்கன் கப்பல் ஏழுகடல் சென்றாலும் மீளும்

3 ஏவா மக்கள் மூவா மருந்து

4 ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்

5 ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்

## ஐ

1 ஐந்து வயதில் அண்ணன் தம்பி, பத்து வயதில் பங்காளி.

2 ஐப்பசி அடைமழை, கார்த்திகை கனமழை

3 ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா ?

4 ஐவருக்குத் தேவி அழியாத பத்தினி.

## ஒ

1 ஒண்ட வந்த தெய்வம் ஊர்த்தெய்வத்தைத் துரத்தினது போல

2 ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்துகின்றது

FREE E- BOOKS , www.thamizham.net.,

3 ஒத்த சொல்லும் மிக்க சொல்லும் உளவாகாமல் சொல்லுக
4 ஒரு கண்ணில் வெண்ணெயும், ஒரு கண்ணில் சுண்ணாம்பும்
5 ஒரு கல்லில் இரு குருவி வீழ்த்துவது போல
6 ஒரு குண்டில் இரு புறாவைச் சுடுவது போல்
7 ஒருகை தட்டினால் ஓசை கேட்குமா ?
8 ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்.
9 ஒரு நாளும் போகாதவன் திருநாளுக்குப் போனானாம், திருநாளும் வெறுநாளாய்ப் போனதாம்.
10 ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டும்
11 ஒரு மரமுந் தோப்பன்று, ஒரு மகவும் மகவன்று
12 ஒரு மரம் தோப்பாகாது
13 ஒருவர் அறிந்தது உலகு அறிந்தது
14 ஒருவனுக்கு சொன்மதி இருக்க வேண்டும் – அல்லது தன்மதி இருக்க வேண்டும்
15 ஒருவன் மாளிகைக்காரனாக இருக்க வேண்டும் ஒருவன் சோளிகைக்காரனாக இருக்க வேண்டும்
16 ஒருவாய் சோற்றுக்கு ஊர்வழியே போனான் பார்ப்பான்
17 ஒற்றைக் கண்ணனுக்கு ஓரக்கண்ணன் உதவினது போல
18 ஒன்று சொன்னால் ஒன்பது சொல்லுவான்

## ஓ

1 ஓடம் விட்ட ஆற்றிலும் அடி சுடும்
2 ஓடிப் போன முயல் பெரிய முயல்
3 ஓடும் பொன்னும் ஒப்ப நினைக்கும்
4 ஓர் உறையில் இரு கத்தியா ?

FREE E- BOOKS , www.thamizham.net.,

# க

1 கடலிலே காயம் கரைத்தது போல

2 கடவுளை நம்பினோர் கைவிடப் படார்

3 கடன் இல்லாச் சோறு கால் வயிறு போதும்

4 கடன் கொண்டும் செய்வன செய்

5 கடன் பட்டையோ, கடை கெட்டையோ

6 கடன் வாங்கியும் பட்டினி
கலியாணம் செய்தும் துறவி

7 கடிக்க வந்த நாய்க்கு எலும்பைப் போட்டாற் போல்

8 கடிவாளமும் சேணமும் இட்டாலும், கழுதை குதிரையாகாது

9 கடுகு சிறுத்தாலும் காரம் போகாது

10 கட்டிக்கொடுத்த சோறும், கற்றுக் கொடுத்த சொல்லும்
எத்தனை நாளைக்கு ?

11 கட்டோடு போனால் கணத்தோடு வரலாம்

12 கண்டது கற்க பண்டிதனாகான்

13 கண்டது கற்க பண்டிதனாவான்

14 கண்டதே காட்சி, கொண்டதே கோலம்

15 கண்டால் ஒரு பேச்சு, காணா விட்டால் ஒரு பேச்சு

16 கண்டால் காமாட்சி நாயகர்,
காணாவிட்டால் காமாட்டி நாயகர்

17 கண்ணாடிக் கூடைக்காரன் கனவு போல

18 கண்ணாரக் கண்டதற்கு ஏன் அகப்பைக் குறி ?

19 கண்ணால் கண்டதை கையால் செய்

FREE E- BOOKS , www.thamizham.net.,

20 கந்த புராணத்தில் இல்லாத புளுகு
எந்த புராணத்திலும் இல்லை

21 கந்தை யானாலும் கசக்கிக்கட்டு, கூழானாலும் குளித்துக்குடி
குடிலானாலும் கூட்டி குடியிரு

22 கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்

23 கருத்தைப் பார்ப்பானையும், சிவத்தைப் பறையனையும்
நம்பக் கூடாது

24 கரும்பு இனிக்கிற தென்று வேரோடு தின்னலாமா ?

25 கரும்பு இனிக்கிற தென்று வேரோடு பிடுங்கலாமா ?

26 கரும்பு தின்னக் கூலி வேண்டுமா ?

27 கரும்பு தின்னக் கைக் கூலியா ?

28 கருமம் முடியும் வரை காலில் விழுந்து கும்பிட்டு
கருமம் முடிந்த பின் காலை வாரியடித்தாற் போல

29 கலவுமி தின்றால் ஓர் அவிழ் (சோறு) தட்டாதா ?

30 கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே

31 கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே

32 கல்லார்க்கு இரண்டு கண் உண்டு
கற்றார்க்கு மூன்று கண் உண்டு

33 கல்லுளிச் சித்தன் போனவழி,
காடு மோடெல்லாம் தவிடு பொடி

34 கல்வியில் பெரியவன் கம்பன்

35 கவலை கறியைத் தின்னும்

36 கழுதை குதிரை யாகுமா ?

37 கழுதைக்குக் காதில் உபதேசம் பண்ணினாலும்
காழ் காழ் என்கிறதை விடாது

FREE E- BOOKS , www.thamizham.net.,

38 கழுதை தேய்ந்து கட்டெறும்பாய், கட்டெறும்பு தேய்ந்து சிற்றெறும்பாய், அதுவுந்தேய்ந்து ஒன்றுமில்லாது போனது

39 கழுதை விட்டையைக் கைநிறைய ஏந்தினாற் போல

40 கள்ளன், மறவன் கனத்தால் அகம்படியன்

41 கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்

42 கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்லுவான்

43 கள்ளைக் கொடுத்து கருமத்தை (காரியம்) அறி

44 களவும் கற்று மற

45 கறையான் புற்றில் பாம்பு குடி கொண்டது போல

46 கற்புடை மனைவியே பொற்புடைச் செல்வம்

47 கற்றுக் கொடுத்த சொல்லும், கட்டிக் கொடுத்த சோறும் நீடு பயன் படா

## கா

1 காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது

2 காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு

3 காசுக்கு இரண்டு குதிரை வேண்டும்—அவை காற்றாய்ப் பறக்க வேண்டும்

4 காடுகெட ஆடுவிடு, ஆறுகெட நாணலிடு, ஊர்கெட நூலை விடு

5 காடு வா என்கிறது, வீடு போ என்கிறது

6 காடை கட்டினால் பாடை கட்டும்

7 கரணிக்குச் சோம்பல் கோடிக்குக் கேடு

8 காணியாசை கோடிக் கேடு

FREE E- BOOKS , www.thamizham.net.,

9 காரிகை கற்றுக் கவி பாடுவதினும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று

10 காரியம் முடியும் மட்டும்,
கழுதையையும் காலைப் பிடிக்க வேண்டும்

11 கார்த்திகைக்கப்பால் மழையுமில்லை
கருணனுக்கப்பால் கொடையுமில்லை

12 காலம் செய்வது ஞாலம் செய்யாது

13 காற்றடிக்கும் போதே தூற்றிக்கொள்ள வேண்டும்

## கி

1 கிட்ட இருந்தால் முட்டப்பகை

2 கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல்

3 கிழவி திரிந்து குழவியானால் என்பது போல

4 கிளியிட்டு வாய்த்தாற் போல

## கீ

1 கீழைச் சாரம் வெங்களப்பன்
மேலைச் சாரம் எங்களப்பன்

## கு

1 குடல் கூழுக்கு அழ, கொண்டை பூவுக்கு அழுகிறதா?

2 குட்டக் குட்டக் குனிகிறவனும் முட்டாள்,
குனியக் குனியக் குட்டுகிறவனும் முட்டாள்

3 குதிரை களவு போனபின் கொட்டகையை பூட்டுவது போல.

4 குத்துக் குத்தாய் நட்டால்
கோட்டை கோட்டையாய் விளையுமா?

FREE E- BOOKS , www.thamizham.net.,

5 குத்துக்கு நிற்பான் வீரமுட்டி,
கொள்ளை கொண்டு போவான் தவசிப் பிள்ளை

6 குத்துவிளக்கிற்கும் குண்டிக் கீழ் இருட்டு

7 குந்தித் தின்றால் குன்றுங் குன்றும்

8 கும்பகோணத்தான் கொள்ளை கொண்டு போக
தஞ்சாவூரான் தண்டங் கொடுத்தானாம்

9 குருடன் கைத் தீப்பந்தமும், குழந்தை கைப் படைகலமும் போல

10 குருட்டுப்பூனை விட்டத்தில் பாய்ந்தது போல

11 குலமகட்குக் கொழுநனே தெய்வம்

12 குலம் குப்பையிலே பணம் பந்தியிலே

13 குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்திலே

14 குழவிக்கு இல்லை குலமும் பகையும்

15 குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதைப் போல

16 குறத்தி பிள்ளை பெற குயவன் காயந் தின்றானாம்

17 குறத்தி பிள்ளை பெற குறவன் மருந்துண்ணும்

18 குறை குடம் கூத்தாடும், நிறை குடம் நிலை நிற்கும்

19 குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

20 குன்று முட்டிய குருவி போல

21 குற்றம் நற்றம் பார்க்கக் கூடாது.

## கூ

1 கூரையேறிக் கோழி பிடிக்கத் தெரியாதவனா
கோபுரமேறிக் குடக் கூத்தாடுவான் ?

2 கூழுக்கு அவ்வை, ஊழுக்குக் கூத்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## கெ

1 கெஞ்சினால் மிஞ்சுவான், மிஞ்சினால் கெஞ்சுவான்

## கே

1 கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்றால்
கேட்பார்க்கு மதியில்லையா ?

## கை

1 கைக்கெட்டினது வாய்க் கெட்டாது,
வாய்க்கெட்டினது வயிற்றிற் கெட்டாது

## கொ

1 கொடாகண்டனுக்கு விடாக் கண்டன்

2 கொடுக்கனுக் (கார்த்திகை) கப்பால் மழையுமில்லை
குமணனுக்கப்பால் கொடையுமில்லை

3 கொடுத்தால் நல்லவன், கொடுக்காவிட்டால் கெட்டவன்.

4 கொம்புளதற்கு ஐந்து முழம்
குதிரைக்கு பத்து முழம் (விலக வேண்டும்)

5 கொல்லன் தெருவில் ஊசி விற்பதா?

6 கொல்லன் தெருவில் ஊசி விற்க வேண்டியதில்லை.

7 கொள்வாரின்றிக் கொடுப்பாரில்லை

8 கொண்டான் கொடுத்தான் இடத்திலே, நெடுநாள் தங்கக் கூடாது

9 கொண்டு கொடுத்து வாழ வேண்டும்

10 கொடைக்குக் குமணன் நடைக்கு நக்கீரன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கோ

1 கோ எப்படி குடிகள் அப்படி

2 கோடி கொடுத்தாலும் கொள்கை விடாதவர்

3 கோடிச் சேலைக்கு ஒரு வெள்ளை
குமரிப்பெண்ணுக்கு ஒரு பிள்ளை

4 கோடியுந் தேடிக் கொடிமரம் நட்டி

5 கோணிக் சோணிக் கோடி கொடுப்பதிலும்
கோணாமல் காணி கொடுப்பது மேல்

6 கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு

7 கோழியடிக்கக் குறுந்தடி வேண்டுமா ?

# ச

1 சக்கிலியப் பெண்ணும் சாமைக்கதிரும்
சமைந்தால் தெரியும்

2 சணப்பன் வீட்டுகோழி தானே விலங்கு மாட்டிக்கொண்டது

3 சந்தை நடுவே ஓகத்தில் அமர்ந்திருப்பது போல

4 சம்பளம் குறைவானாலும் பேர் பெரிய பேர்

# சா

1 சாண் ஏறி முழஞ்சறுக்கும்

2 சாண்பிள்ளை ஆண்பிள்ளை மாண்பிள்ளை

# சி

1 சித்திரை என்று சிறுக்கிறது மில்லை.
பங்குனி என்று பருக்கிறதுமில்லை

2 சித்திரை மாத உழவு, பத்தரைமாற்றுத் தங்கம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

3 சிறுகக் கட்டிப் பெருக வாழ்
4 சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்
5 சிறுபிள்ளை இல்லாத வீடும், சீரகம் இல்லாத கறியும் செவ்வையா யிரா
6 சிறுபொறி பெருந் தீ

## சீ

1 சீரைத் தேடின் ஏரைத் தேடு

## சு

1 சுத்தம் சோறு போடும்
2 சுரமண்டலம் கடித்தால் பரமண்டலம்
3 சுள்ளாப்பெல்லாம் பொல்லாப்பு

## சூ

1 சூத்திலடித்தானாம் பல்லுப் போச்சாம்
2 சூரனுக்குச் சேர்ந்த மரணஞ் சிறு துரும்பு

## செ

1 செத்தால் தெரியும் சுடுகாடு
2 செத்துங் கொடுத்தான் சீதக்காதி
செத்துங் கெடுத்தார் சேதுப்புலவர்
3 செய்த கை சேவேறும், செய்யாத கை நோவேறும்
4 செய்யத் தக்கதைச் செய்யாமல் விட்டுவிடுவதினும் பிந்திச் செய்வது மேல் (ஆங்கிலம்)
5 செவிடர் கூடிச் செய்யும காரியம் சீர்கெடும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## சே

1 சேதாவை(பசு)க் கொன்று, செருப்பை தானம் செய்தது போல்

## சொ

1 சொள்ளுப் பெருத்தால் சொல்லுப் பெருக்கும்

## சோ

1 சோற்றுக்குத்தான் பஞ்சம், சொல்லுக்குமா பஞ்சம் ?

2 சோற்றுக்குச் செலவும், ஞாலத்துக்குப் பாரமுமாய்

## த

1 தடியெடுத்தவ னெல்லாம் தண்டற்காரனா?

2 தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்

3 தந்தைக்குப் பின் தமையன்

4 தமக்கை கிண்ணிப் பிச்சையெடுக்க—தம்பி
கும்பகோணத்தில் கோதானம் பண்ணுகிறான்

5 தமிழுக்குக் கெதியே கதி

6 தலையால் வந்ததை காலால் தள்ளுகிறான்

7 தலையைத் தடவி மூளையை உறிஞ்சுவது போல்

8 தவத்திற்கு ஒருவர், கல்விக்கு இருவர், வழிக்கு மூவர்

9 தனக்கு மிஞ்சித் தானம்

10 தன் குற்றம் இருக்கப் பிறர் குற்றம் பார்க்கிறதா?

11 தன் குற்றம் தனக்குத் தோன்றாது

12 தன் கையே தனக்குதவி

13 தன்வினை தன்னைச் சுடும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

14 தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி (ஆசிரியர்) என்ன செய்வான்?

15 தன்னுயிர் போல் மண்ணுயிரையும் எண்ண வேண்டும்

16 தன்னுயிர்க்கு யானை, அயலூர்க்குப் பூனை

17 தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்

18 தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்
தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்

19 தலைக்கு மிஞ்சின தண்டனையில்லை
நீர்ச்சீலைக்கு மிஞ்சின நிரப்பில்லை (மடல்குறிப்பு)

## தா

1 தாயும் பிள்ளையுமானாலும், வாயும் வயிறும் வேறு

2 தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்கக்கூடாது

3 தாய் எட்டடி தாண்டினால், குட்டி பதினாறு அடி தாண்டும்

4 தாய்க்குத் தன் பிள்ளை நன்பிள்ளை

5 தாரமும் குருவும் தலைவிதி

6 தான் அறியாதான் என்பதை அறியாதவன் முட்டாள்
அவனை விட்டொழி (ஆங்கிலம்)

7 தான் திருடி அசலை நம்பான்

8 தான் வெட்டின குழியில் தானே விழுவான்

## தி

1 திருத்தக் கல்லுக்குத் தெற்கிட்டுப் பிறந்தவன்

2 திருவாக்கிற்கு எதிர் வாக்குண்டோ?

3 திருவாசகத்திற்கு உருகார், ஒரு வாசகத்திற்கும் உருகார்

FREE E- BOOKS , www.thamizham.net.,

4 திரைகடலோடியும் திரவியம் தேடு
5 திறவுக்கோல் பெற்ற வேலைக்காரன்
திருடனாக மாறிவிடுவது போல்

## து

1 துளிதுளியாய் வெள்ளமா, துடுமென்று வெள்ளமா?

## தூ

1 தூங்கின பிள்ளை பிழைத்தாலும் ஏங்கின பிள்ளை பிழைக்காது
2 தூங்கின மடங்கலை (அரிமா)—ஓங்கி
தட்டி எழுப்பியது போல
3 தூங்கினவன் கன்று சேங்கன்று.

## தெ

1 தெரியாது மிதிப்பினும் தீச் சுடுதல் போல
2 தென்னை மரத்தில் ஏனடா ஏறினாய் என்றால்,
புல் பிடுங்க ஏறினேன் புல்லில்லை என்கிறான்.
3 தென்னை மரத்தை கோணலாக்கிய வரும்
தேக்கு மரத்தை நேராக்கியவரும் இல்லை

## தே

1 தேவைக்கு மிஞ்சின பணமும்—இறந்தபின்
எஞ்சும் பணமும் வீண்
2 தேனை வழித்தவன் புறங்கையை நாவால் வழிப்பது போல



FREE E- BOOKS , www.thamizham.net.,

## தை

1 தை பிறந்தால் வழி பிறக்கும்

## தொ

1 தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

2 தொட்டுக் காட்டாத வித்தை,
தட்டுப் போட்டாலும் தெரியாது

## தோ

1 தோட்டி போல உழைக்க வேண்டும்,
துரை போலச் சாப்பிட வேண்டும்

## ந

1 நண்டாணமுங் களியும் தின்றாயோ தெரியும்
[ஆணம் = குழம்பு, நண்டு + ஆணம்]

2 நண்டு கொழுத்தால் வளைக்குள் இராது

3 நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்ப்பது போல

4 நல்ல மாட்டிற்கு ஒரு சூடு, நல்ல பிள்ளைக்கு ஒரு சொல்

5 நன்னி(அற்பன்)க்குப் பதவி வந்தால்
நள்ளிரவில் குடை பிடிப்பான்

6 நரை திரை வருமுன்னமே நல்வினை செய்ய வேண்டும்

7 நல்லது பொல்லது நடந்தால் நாலுபேர்க்குச் சாப்பாடு கிடைக்கும்

## நா

1 நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும்,
தோட்டிக்குப் புல் சுமக்கிறது போகாது

FREE E- BOOKS , www.thamizham.net.,

2 நாயின் வாலை மட்டை வைத்துக் கட்டினாலும் நேராகுமா?

3 நாய் கொண்டால் பார்ப்பாருந் தின்பர் உடும்பு

4 நாய்தான் குரைக்கும், நாய் விற்ற காசுமா குரைக்கும்?

5 நாய்வாலைக் குணக் (வளைவு) கெடுக்கலாமா?

6 நாவில் பிறக்கும் நன்மையும் தீமையும்

7 நாளுங் கிழமையும் பார்த்துச் செய்தாலும்
வருவது வந்தே தீரும்

8 நாளை வரும் பலாக்காயினும், இன்று வரும்
களாக்காய் மேல்

9 நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக

10 நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான்

## நி

1 நின்றால் நெடுஞ்சுவர், விழுந்தால் குட்டிச் சுவர்

## நீ

1 நீச்சுநிலை இல்லாத ஆற்றிலே, நின்றெப்படி முழுகிறது ?

2 நீலிக்குக் கண்ணீர் நிமையிலே (கண்ணிமை)

## நு

1 நுணலும் தன் வாயால் கெடும்

## நூ

1 நூறுநாள் ஓதி, ஆறுநாள் விட தீரும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## நெ

1 நெல்வகையை எண்ணினாலும்,
பள்(பள்ளர்) வகையை எண்ண முடியாது

## நே

1. நேற்றிருந்தான் இன்றில்லை

## நொ

1 நொறுங்கத் தின்றவனுக்கு நூறு வயது

## நோ

1 நோயாளி ஊழாளி (விதியாளி) யானால்,
மருத்துவன் (பரிகாரி) பேராளி

## ப

1 பகலில் அக்கம் பக்கம் பார்த்து பேசு
2 பகைவன் வாழும் பகைபோற் கேளும் (கொடியவை)
3 பசியடங்கினவன் பெற்ற உணவு போல்
4 பசி வந்தால் பத்தும் பறந்து போம்
5 பசுமை யில்லாத ஓலை சலசலக்கும்
6 பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்
7 பட்டந் தப்பினால் நட்டம்
8 பட்டப் பகல்போல நிலவெறிக்கக் குட்டிச் சுவரில்
முட்டிக் கொள்ள வெள்ளெழுத்தா ?
9 பட்டவனுக்குத்தான் தெரியும் வறுமைத் துன்பம்
10 பட்டால் தெரியும் முட்டாளுக்கு

FREE E- BOOKS , www.thamizham.net.,

11 பணத்தைக் கண்டால் பிணமும் வாயைத் திறக்கும்
12 பணமிருந்தால் மனமிராது, மனமிருந்தால் பணமிராது
13 பணம் பந்தியிலே குலம் குப்பையிலே
14 பதறாத கருமம் சிதறாது
15 பயிரிடு பலன் தரும்
16 பல துளி பெரு வெள்ளம்
17 பலனை விரும்பினால் பாடுபட வேண்டும்
18 பழகப் பழகப் பாலும் புளிக்கும்
19 பழங்காலைத் தூர்க்காதே, புதுக்காலை வெட்டாதே
20 பழியோரிடம் பளகோரிடம்
21 பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது
22 பனி பெய்து கடல் நிறையுமா?
23 பன்றியொடு சேர்ந்த கன்றும் பவ்வீ(மலம்) தின்னும்
24 பட்டுப் பழகி தெரிய வேண்டும்

## பா

1 பாடில்லால் பயனில்லை
2 பாட்டனின் முதற் கலியாணத்தில்—பேரன் பந்தம் பிடித்த கதைபோல
3 பாட்டிமார் குழந்தைகட்கு பூச்சாண்டி காட்டுவது போல்
4 பாண்சேரிப் பற்கிளக்குமாறு
5 பாண் (பாணர்) சேரியில் பாட்டுப் பாடுகிறதா?
6 பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்
7 பார்ப்பானில் ஏழையுமில்லை, பறையனில் பணக்காரனுமில்லை

FREE E- BOOKS , www.thamizham.net.,

8 பார்ப்பானுக்கும் பன்றிக்கும் பயணச் செலவில்லை

9 பார்ப்பான் தமிழும், வேளாளன் கிரந்தமும்
வழவழா கொழகொழா

10 பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே

11 பாழ்ந்தனிசு வேண்டிப் பாம்புக்குடம் பெற்றான்

## பி

1 பிரிட்டிசு நீதியும், பிரெஞ்சு வீதியும் (ஆங்கிலம்)

2 பிள்ளையாரை பிடித்த சனியன்
அரச மரத்தையும் பிடித்தது போல

3 பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது

4 பிறவிக் குருடரும், புரை படர்ந்த கண்ணரும்
கூர்ங் கண்ணருக்கு வழிகாட்டுவதை போல

5 பிறவிக் குருடனைப் பிடித்து—அரசவீதி
விழிக்கச் சொல்வது போல

## பு

1 புதையலைப் பூதம் காத்தாற் போல்

2 புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ?

3 புலித்தோல் போர்த்த பெற்றம்

4 புலி பசித்தாலும் புல்லை தின்னாது

5 புலியடிக்கும் முன் கிலியடிக்கும்

6 புலிவேட்டைக்குச் சென்ற புது வேட்டுவன்
புலித்தடங் கண்டு அஞ்சி ஓடி வந்துவிட்டானாம்

7 புன்குடிலாயினும் தன் குடிலா யிருத்தல் வேண்டும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## பூ

1 பூனை உடல் முழுவதும் சூடிட்டுக் கொண்டாலும்
புலியாகி விடாது

## பெ

1 பெண்ணைப் பெற்றவன் பேச்சுக் கேட்பான்

2 பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்

3 பெற்றவருக்குத்தான் தெரியும், பிள்ளையின் அருமை

4 பெற்றோர் அன்பும் பிள்ளைகளைக் கொல்லும்

5 பெற்றது பிறந்தது பிற்காலத்தில் உதவும்

## பே

1 பேதை பெருஞ்செல்வம் அடைந்தால்
அயலார் கொழுக்கத் தமர் பசிப்பர்

2 பேராசை பேரிழப்பு

## பொ

1 பொய் சொல்லி வாழ்ந்தவரும் உளர்,
மெய் சொல்லித் தாழ்ந்தவரும் உளர்

2 பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை,
மெய் சொல்லி கெட்டவனுமில்லை

3 பொய் சொல்லி வாழ்வது முண்டு,
மெய் சொல்லி கெடுவது முண்டு

4 பொய் சொன்ன வாய்க்குப் புகாக் (உணவு) கிடையாது

5 பொரிமாவை மெச்சினானாம் பொக்கை வாயன்

6 பொறுத்தார் நாடாள்வார், பொங்கினார் காடாள்வார்

7 பொறுத்தார் புவியாள்வார்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## போ

1 போன மாட்டைத் தேடுவாரு மில்லை,
வந்த மாட்டைக் கட்டுவாரு மில்லை

2 போனால் போன இடம், வந்தால் வந்த இடம்

## ம

1 மகனறிவு தந்தையறிவு

2 மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை

3 மட்டிப் பயலுக்கு துட்டக் குருக்கள்

4 மணியடித்து வண்டி புறப்பட்டது போல

5 மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக்கு,
மண்ணாங்கட்டி பணியாரம்

6 மதியாதார் தலைவாசல் மிதியாமை கோடி பெறும்

7 மயிலே! மயிலே! இறகு போடு என்றால் போடுமா?

8 மரத்தை விட்டவன் தண்ணீர் விட மாட்டானா?

9 மரம் நல்ல தென்பதும் கெட்ட தென்பதும்
அதனதன் கனியால் அறியப்படும்

10 மலரோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்

11 மலை கல்லி எலி பிடித்தல் போல

12 மலையில் விளைந்தால் மாகாளி,
நாட்டில் விளைந்தால் நன்னாரி

13 மழை நின்றபின் தொடர்ந்த தூவாணம் போல

14 மழை பெய்தும் கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும்

15 மனம் இருந்தால் மலையும் சாயும்

16 மனைக்கு வேம்பு, மன்றுக்குப் புளி

FREE E- BOOKS , www.thamizham.net.,

17 மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி

18 மன்னார்குடி மதிலழகு, திருவாரூர் தேரழகு, திருவிடை மருதூர்த் தெருவழகு

## மா

1 மாவைத் தின்றால் பணியாரமில்லை, பணியாரம் தின்றால் மாவில்லை

## மி

1 மின்னுவதெல்லாம் பொன்னாகுமா ?

2 மிச்சம் மிகுதியை சேர்த்து வை

## மு

1 முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?

2 முடவனுக்குக் கொம்பிலுள்ள தேன் கிட்டுமா?

3 முதற் கோணல் முற்றுங் கோணல்

4 முயற்கோடும், ஆமை யிறகும் போல

5 முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்

6 முருக்கம் பூ சிவந்ததினால் முடிப்பார் உண்டோ?

7 முருங்கைக் காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம்

8 முருங்கை பருத்து முட்டுக்கல் ஆகுமா ?

9 முழுத்த ஆண் பிள்ளைக்கு மூன்று வெற்றிலை

10 முழுப் புல்லை, முக்கால் மயிலை, அரைச்சிவப்பு, கால்பருப்பு

11 முழுப் பூசணிக்காயைச் சோற்றில் முழுக்குவது போல

12 முழு வுடும்பு, முக்கால் காடை, அரைக்கோழி, கால்ஆடு

13 முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்

14 முன் ஏருக்கு வந்தது பின் ஏருக்கு (வரும்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

## மூ

1 மூத்த பிள்ளைக்கு உடல்வலி மிக்கிருக்கும்,
இளைய பிள்ளைக்கு மதிவலி மிக்கிருக்கும்

2 மூத்தோர் சொல்லும் வார்த்தை அமுதம்

3 மூவர் போன கருமம் மூதேவி யடையும்

## மெ

1 மெய் வெல்லும், பொய் தோற்கும்

## மே

1 மேட்டுப் புன்செயை உழுதவனும் கெட்டான்,
மேனா மினுக்கியை மணந்தவனும் கெட்டான்

2 மேய்ப்பனில்லா ஆடுகள் போல

## மொ

1 மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும்
முடி போடுவது போல்

## யா

1 யாராத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரியும்

2 யாவையும் பாடிக் கோவையைப் பாடு

3 யானை இறந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்

4 யானை கொழுத்தால் பாகனுக்கு அடங்காது

5 யானையைக் கட்டி தீனி போட்டது போல

6 யானை வரும் முன்னே, மணியோசை வரும் பின்னே

FREE E- BOOKS , www.thamizham.net.,

## வ

1 வடக்கத்தியானையும், வயிற்று வலியையும், நம்பக் கூடாது

2 வண்ணான் சீலைக்கு வழக்கில்லை

3 வருவது வந்தே தீரும்

4 வலிமைக்கு வழக்கில்லை

5 வலிய வந்தால் கிழவி

6 வளவனாயினும் அளவறிந்து உண்

7 வள்ளுவர் வாக்கு வாய்க்காமல் போகாது

## வா

1 வாசல் நிலையில் முட்டிவிட்டு, வணங்கி குனிவது போல

2 வாய்த்தால் நமக்கு இல்லாவிட்டால் பிள்ளையாருக்கு

3 வாய் நல்லதாயின் ஊரும் நல்லது

4 வாரி யிறைத்தும் வளவனாகிறது முண்டு, இறுகப் பிடித்தும் ஏழையாகிறது முண்டு

5 வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடஞ்சென்றால் கால்நடையாய்ச் சென்றவரும் கனகதண்டி (பல்லக்கு) ஏறுவரே

6 வாழை சாக மேற்கு, வைத்தவன் சாக தெற்கு

7 வாழை வடக்கு, தென்னை தெற்கு

8 வாழைப் பழத் தொலியை நட்டால் வாழை முளைக்கும் என்பது போல

9 வாழை வாழ வடக்கு, வைத்தவன் வாழ கிழக்கு

10 வாழை வடக்கு, வான்கமுகு தெற்கு, சோலை கிழக்கு துய்ய பலா மேற்கு

11 வானத்து மீனுக்கு வன்றூண்டிலிடும் கதை போல

FREE E- BOOKS , www.thamizham.net.,

## வி

1 விடுமுறை என்றால் இன்பம், வேலை என்றால் துன்பம்
2 விட்டதடா ஆசை விளாம் பழத்து ஓட்டோடே
3 விண் பட்ட கொக்கு வல்லூறு கண்டது போல்
4 விதியை யார் வெல்ல முடியும்?
5 விருந்தும் மருந்தும் மூன்று வேளை
6 விரையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா?
7 விழலுக்கு இறைத்த நீர் போல
8 விளக் கேற்றா வீட்டில் வேதாளம் குடிபுகும்
9 விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழலாமா?
10 விளையாட்டா யிருந்தது வினையால் முடிந்தது
11 விளையாட்டே வினையானது
12 விளையாட்டுப் பிள்ளைகள் செய்த வேளாண்மை வீடு வந்து சேராது
13 விளையும் பயிர் முளையில் தெரியும்
14 வினை விதைத்தவன் வினை யறுப்பான்
15 விட்ட குறை தொட்ட குறை முடிக்க வேண்டும்
16 வில்லுக்குச் சேரன், சொல்லுக்குக் கீரன்
17 வில்லுக்கு ஓரி, சொல்லுக்கு மாவலி

## வெ

1 வெண்ணெய் தடவிக் கொக்கு பிடிப்பது போல
2 வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை

FREE E- BOOKS , www.thamizham.net.,

3 வெறுவாயை மெல்லுகிறவன்
அவல் கிடைத்தால் சும்மா விடுவானா?

4 வெறுவாயை மென்றுகொண்டிருந்தவருக்கு
அவல் கிடைத்தது போல

## வே

1 வேகிற வீட்டில் பிடுங்கினது ஊதியம்

2 வேர் பார், தழை பார், மெல்ல மெல்ல
செந்தூரச் சுண்ணம் பார்

3 வேலி கட்டிய ஆட்டுக் கிடைக்குட் புக—ஓநாய்
வழி பார்த்துக்கொண்டிருப்பது போல

4 வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாயிற்று

5 வேலையில்லாத மஞ்சிகன் (அம்பட்டன்)
வெண்கழுதையைப் பிடித்து சிரைத்தானாம்

6 வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்

## மலையாளம்

1 அகத்திட்டால் புறத்தறியாம்

2 அரி(அரிசி) எறிஞ்ஞால் ஆயிரம் காக்க

3 அளவு கடன்னால் அம்ருதும் நஞ்சு

4 ஆகும் காலம் செய்தது, சாகும் காலம் கானாம்

5 ஆணாயால் ஒரு பெண்ணு வேண்டே

6 ஆயிரம் மாகாணி அறுபத்து ரண்டர

7 ஆர்க்கானும் கொடுக்கும்போழ் அருதென்று விலக்கருது

8 ஆழம் முங்ஙியால் குளிரில்ல

FREE E- BOOKS , www.thamizham.net.,

9 இக்கரனின்னு நோக்கும் போள் அக்கர பச்சா
10 இரிம்பூர கல்லும் தேயும்
11 ஈ எடுத்தால் பேன் கூலியோ ?
12 எல்லாரும் தண்டில் கயறியால் எடுப்பான் ஆள் வேண்டே!
13 ஏறக் கிழக்கோட்டுப் போயால் படிஞ்ஞாட்டு
14 கக்குவான் துடங்ஙியால் நில்க்குவான் பரிக்கேணம்
15 கடலில் காயம் கலக்கியது போலே
16 கட்குவான் பரிக்கில் ஞேலுவான் பரிக்கேணம்
17 கரயுன்ன குட்டிக்கே பால் உள்ளு
18 காமத்தின்னு கண்ணில்ல
19 காற்றுள்ள போள் தூற்றணும்
20 கார்யத்தின்னு கழுத காலும் பிடிக்கேணம்
21 குரங்ஙின்றே கய்யில் பூமால கிட்டியது போலெ
22 குரங்குன்ன நாயி கடிக்க யில்ல
23 கொஞ்சன் துள்ளியால் முட்டோளம், ஏற
துள்ளியால் சட்டியில்
24 கோடாதெ காணி கொடுத்தால் கோடி கொடுத்த பலம்
25 கோடி கோடி கொடுத்தால் காணி கொடுத்த பலம்
26 சக்கர கூட்டியால் கம்பிளியும் தின்னாம்
27 சாண் வெட்டியால் முழம் நீளும்
28 செறுவிரல் வீங்ஙியால் பெருவரலோளம்
29 தரழே கொய்தவன் ஏறே சுமக்கேணம்
30 தலயண மாறியால் தலக்கேடு பொறுக்குமோ ?
31 தீயில்லாத புகயுண்டாக யில்ல

FREE E- BOOKS , www.thamizham.net.,

32 தூபம் காட்டியாலும் பாபம் போகா
33 நரி நரெச்சாலும் கடிக்கும்
34 நிலாவினெ நோக்கி நாயி குரக்கும் போலெ
35 பல துள்ளி பெரு வெள்ளம்
36 பாற்றி துப்பியால் பள்ளியாயிலும் துப்பாம்
37 பொன் சூசி குத்தியாலும் கண்ணு போம்
38 மரத்தின்னு காயி கனமோ ?
39 மருன்னும் விருன்னும் மூன்னு நாள்
40 மலர்ன்னு கிடன்னு துப்பியால் மாறத்து விழும்
41 மீங்கண்டம் வேண்டாத பூச்ச யில்ல
42 மூவர் கூடியால் முற்றம் அடிக்கா
43 ரண்டு தோணியில் கால் வெச்சது போலெ
44 வளச்சுக் கெட்டியால் எத்தி நோக்கும்

## துளு

1 ஆண்டெத பாயி கட்டெலி தூண்டெத பாயி கட்டேல்யா ? =
[அண்டா வாயைக் கட்டலாம், தொண்டை வாயைக் கட்டலாமா ?]

2 உப்பு தீந்தினாயெ நீரு பர்வெ =
[உப்புத் தின்றவன் நீர் பருகுகிறான்]

3 கர்ம்பு சீபெ அந்துது பேரு முட்ட அக்கியட -
[கரும்பு தீவியதென்று வேர் முட்ட தின்னக் கூடாது]

4 காடு சொக்கினவுளு ஏடுனு புடொடு, ஊரு சொர்க்கினவுளு கொங்கணனு புடொடு -
[காடு சொக்கின வழி (தழைத்த விடத்து) ஆட்டை விட

வேண்டும், ஊர் சொக்கின வழி கொங்கணனைவிட வேண்டும்]— (சொக்குதல் = அழகாயிருத்தல்)

5 காலொரு தக்க கோல, தேசொகு தக்க பாஷெ, தாளொகு தக்க மேள =
[காலத்துக்குத் தக்க கோலம், தேசத்துக்குத் தக்க பாசை, தாளத்துக்குத் தக்க மேளம்]

6 தன தரெகு தன கை = தன் கையே தனக்குதவி

7 தானு களுவ ஆண்ட ஊரு களுவெகெ =
[தான் கள்ளனானால் ஊருங் கள்ளனாம்]

8 நலிபெரெ திரியந்தினாயகு ஜாலு வோரெகெ =
[நடஞ் செய்யத் தெரியாதவனுக்கு நிலஞ் சமனில்லை]

9 நாயித பீல வோண்டெடு பாடுண்ட சம ஆவா ? =
[நாயின் வாலை குழாய்க்குள் விட்டாலும் சமமாகுமா ?]

10 பஜெ இத்தினாது காரு நீளொடு =
[பாயிருக்கிற அளவு கால் நீட்ட வேண்டும்]

11 பல்லடு கீள்ளுது பரண்டு பத்தியெ =
[பள்ளத்திற் குந்திக் குட்டித் தவளையைப் பிடித்தான்]

12 பாயிடு மக மக, பஞ்சிடு பக பக =
[வாயில் மகன் மகன் வயிற்றில் பகை பகை]

13 பிஜினுகு தாயெகு கர்வத போலெ ? =
[எறும்புக்கு எதற்கு இரும்பு வேலை ?]

14 பெரிகு பூரி பெட்டுலா கர்பொகு கொரி நீருலா பிர பருவா ? =
[பிறக்கு (முதுகு) விழுந்த அடியும், இரும்பு கொண்ட நீரும் பிறகு (திரும்ப) வருமா ?]

15 மல்ல புதெ மெல்ல ஜாவொடு =
[மல்ல (பெரிய) பொதியை மெல்ல இறக்க வேணடும்]

FREE E- BOOKS , www.thamizham.net.,

16 மாதிக இல்லுடு உணசு ஆண்டப்ப்ராணகு தானெ ?
(பறையன் இல்லில் உணவானால் பார்ப்பானுக்கு என்ன?

## இந்தி

1 ஏக் ஹாத்ஸே தாலீ நஹீன் பஜ்தீ ? =
[ஒரு கை தட்டினால் ஓசை கேட்குமா ?]

2 ஏக் மியான்மே தோ தல்வார் நஹீன் ? =
[ஓர் உறையில் இரு கத்தியா]

3 காய் மார்க்கர் ஜூத்தா தான் = [சோதாவை (பசுவை) கொன்று, செருப்பைத் தானம் செய்தது போல்]

4 சி ராக் தலே அங் தே ரா =
[குத்து விளக்கிற்கும் குண்டிக்குக் கீழ் இருட்டு]

5 ஸரூரத் கே வக்த் கதேகோ பீ, பாப் பனானா பட்தா ஹை
[காரியம் முடியும் மட்டும் கழுதையையும் காலைப் பிடிக்க வேண்டும்]

6 ஜான் பூஜ்கர் குவேம்மே கிர்னா ? =
[விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழலாமா ?]

7 தான் கீ பச்சியாகா தாந்த் நகீன் தேக்கா ஜாத்தா ? =

[அறத்திற்குக் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கிறதா ?]

8 நஹீன் கதா பீ கோடா பன் சக்தா ஹை ? =
[கழுதை குதிரையாகுமா]

9 நாச்சை ந ஆவே அங்கனவே டேட் =
[ஆட மாட்டாத தேவடியாள் கூடங் கோணல் என்றாளாம்]

10 பகுத்ஸே ஜோகி மட் உ ஜாட்
[ஆண்டிகள் கூடி மடங் கட்டினாற் போல்]



FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஆங்கிலம்

1 A father is treasure, a brother a comfort, but a friend is both
2 Better late than never
3 Cheating play never thrives
4 Cold weather and knaves come out of the north
5 He who knows not that he knows not is a fool, shun him
6 If you want peace, be prepared for war
7 Marriges are made in heaven
8 Oil and truth will get upper most at last
9 One swallow cannot make a summer
10 Riches serve a wise man, but command a fool
11 Serateh a russian and you find a tartar
12 The pen is mightier than the sword
13 When you are at Rome do as Rome does

எந்தமிழ் மேலென்ற உண்மை எடுத்துரைப்பேயன்
செந்தமிழன்! செந்நெறி பயன்மழை!— தந்தமிழின்
கீழறுப்போன் கீழோனே! தேவநே யர்வாழ்க!
வாழிய செந்தமிழ் மாண்பு.

—பாவேந்தர்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## "பழமொழிகள் இடம் பெற்ற நூல்களும், எண்களும்"

1 இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் ?

அ—221, 243, ஆ—24, 47, உ—4, 11, ஊ—8, எ—17. க—27, த—11, ந—2, ப—4, 13, பா—3, பி—5, பு—6, பூ—1, பெ—3, பே—2, ம—13, மு—2, வ—1, ஆங்கிலம்—4, (மொத்தம்—23, பழமொழிகள்)

2 உயர்தரக் கட்டுரை இலக்கணம் I

அ—2, 8, 9, 19, 22, 36, 38, 94, 116, 147, 149, 179, 210, 228, 233, 234, 242, 243, ஆ—1, 3, 5, 7, 11, 12, 13, 16, 23, 25, 30, 36, 38, 39, 40, 41, 43, 44, 49, இ—5, 8, 10, 12, 14, 17, 18, 19, 20, 22 ஈ—2, உ—7, 8, 9, 12, 13, 22, ஊ—4, 6, 7, 12, 13, 14, எ—8, 9, 10, 12, 18, 21, 24, ஏ—4, ஐ—3, ஒ—8, 14, 18, க—6, 10, 15, 16, 25, 32, 33, 46, கா—1, 3, 5, 9, 12, 13. கி—1, கு—2, 4, 8, 14, கெ—1, கே—1, கொ—1, 3, 4, கோ—3, 6, 7, ச—4, சா—2, சி - 1, 4, 5, சீ - 1, சோ - 1, த - 2, 6, 8, 10, து - 1, தூ - 3, தெ—2, 3, தொ - 1 தோ - 1, ந - 4, நா - 1,4, 8, 10, நி - 1, நீ - 1, நொ - 1, ப - 2, 5, 8, 10, 12, 15, 17, 22, பி-1, பு - 2, 7, பெ-3, பே - 1, பொ-2, 3, போ - 1, 2, ம - 2, 3, 5, 7, 12, 14, 15, 16, மா - 1, மி - 1, மு-1, 2, 9, 13, 14, யா-1, 3, 4, வ - 3, 7, வா - 2 3, வி, 1, 5, 6, 8, 12, வெ - 2, (மொத்தம் - 169, ப. மொ)

3. உயர்தரக் கட்டுரை இலக்கணம் II

அ - 32, 64, 101, 129, 152, 232, 247, 250, ஆ - 17, 18, 33, 35A, 50, உ - 5, 16, 23, ஊ - 2, 15, ஒ - 1, கா–2, 8. கு-15, 21, கொ-8, 9, செ-5, த - 2, 11, 17, 18, தா—1, ந - 6, 7, நா - 7, ப - 6, 23, 24, பெ - 2, 4, 5, பொ - 1, ம - 9, மி - 2, மு-5, வா - 4, வி - 15 (மொத்தம்-46, ப. மொ)

FREE E- BOOKS , www.thamizham.net.,

4. என் அண்ணாமலை நகர் வாழ்க்கை

ஆ—14, இ—11, ஒ—12, கொ - 6, ச – 3, செ - 2, ப - 3, மு – 11, வி – 3, வெ - 4, ஆங்கிலம் - 9, (மொத்தம் – 11 – ப. மொ)

5. ஒப்பியன் மொழி நூல் :-

உ – 10, ஒ – 16, க - 23, கா - 4. 8, கோ – 4, சொ - 1, ந – 3, பா – 2, 4, 7. 8, 9, ம – 6, 11, யா - 2, (மொத்தம் – 16 - ப. மொ)

6. கட்டுரை வரைவியல் :-

இ – 3, 7, ஈ - 3, உ –20, ஊ – 5, 10, எ – 1, 2, 5, ஒ - 4, ஓ – 3, க – 12, 13, 14, 19, 21, 22, கு - 18, கொ - 1. சி – 3, சு - 1, சோ – 2, தி - 3, நூ – 1, ப – 23, மு - 4, வி - 4, 7 (மொத்தம் - 28. ப. மொ)

7. செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகர முதலி :-

அ - 3 முதல் 8, 10 முதல் 18, 20. 21, 23 முதல் 31, 33, 34, 35, 37, 39 முதல் 63, 65 முதல் 70, 73 முதல் 99, 102 முதல் 128, 130 முதல் 146, 148, 150, 151, 153 முதல் 173, 175 முதல் 209, 212 முதல் 215, 223, 224, 225, 227, 230, 231, 235 முதல் 240, 244, 245, 248, ஆ - 7, 9, 24, 28, 37, 42, 48, இ – 1, 4, உ - 11, எ – 7, 15, 16, 23, ஐ – 1, 2, 4, க - 7, 18, 29, கீ - 1, கு - 1, த – 3, 14, ப - 1, பு – 5, வெ – 3, (மொத்தம் – 237. ப. மொ)

8 சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர் கேடுகள் :-

அ - 174, 221, க - 17, (மொத்தம் - 3, ப. மொ)

FREE E- BOOKS , www.thamizham.net.,

9. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் :-

உ - 9, 19, ஊ - 9. கு - 11, 13, நு - 1, ப - 19, ம - 8 (மொத்தம் - 8. ப. மொ)

10. தமிழர் மதம் :-

அ - 71, 72, 217, 218, 224, 229, ஆ - 35, உ - 2, எ - 3, 18, க - 2, 20, 45, கி - 2, கூ - 1, ச - 1, தி - 5, தெ - 1, ப - 20, பு - 1, ம - 17, வே - 6, (மொத்தம் - 22. ப. மொ)

11. தமிழர் வரலாறு:—

ஆ - 22, 27, இ-6, ஊ = 11, எ-6, க-40, கா-11, கு-2, 16, கொ - 2, த - 3, தா - 6, நெ - 1, பி - 1, பொ - 5, ம - 1, 17, யா -6, ஆங்கிலம் - 5, 11, (மொத்தம் - 20. ப. மொ)

12 தமிழ் இலக்கிய வரலாறு:-

ஆ - 29, 45, 46, உ - 14, எ - 6, ஏ - 1, ஒ - 17, க - 8, 22, 30, 31, 33, 34, கு - 2, த - 5, தி - 3, து - 2, பி - 1, பொ - 5, ம - 17. மு - 12, வா - 11, வே - 1, ஆங்கிலம் - 3, 8, 13, (மொத்தம் - 26, ப. மொ)

13 தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?:-

உ - 15, க - 3, 4, 5, கோ - 3, (மொத்தம் - 5. ப. மொ)

14. தமிழ் நாட்டு விளையாட்டுக்கள்:-

கி - 4, கோ - 7, வ - 2, வி - 11 (மொத்தம்- 4. ப. மொ)

15. தமிழ் வரலாறு:-

அ - 246, ஆ - 4, 15, 25, 34, 36, இ - 10, ஒ - 7, ஓ - 4, க - 36, கா - 10, கு - 6, கோ - 3, சே - 1, வி - 9,

FREE E- BOOKS , www.thamizham.net.,

மலையாளம்: - 5, 7, 8, 12, 13, 14, 17, 23, 26, 27, 28, 30, 32 36, 37, 42, 44, இந்தி - 1 முதல் 10 முடிய.
(மொத்தம் 42, ப. மொ)

16. திரவிடத்தாய்;-

ஆ - 4, இ - 16, உ - 6, 17, க - 24, த - 12, தா - 7 நா - 2. துளு: - 1 முதல் 16 முடிய,
மலையாளம் - 1, 2, 3, 4, 6, 9, 10, 11, 15, 18 19, 20, 21, 22, 24, 25, 29, 31, 33, 34, 35, 38, 39, 40, 41, 43,
(மொத்தம் - 50, ப. மொ)

17. திருக்குறள் தமிழ் மரபுரை

அ - 58, 218, 241, 249, 251, ஆ - 2, 10, 25, 26, 29, 31, 36, 43, இ - 9. 11, 21, 25, ஈ - 1, உ - 1, 3, 9, 18, 21, ஊ—1 12, எ—13, 14, 19, ஏ—3, ஒ—3, 5, 6, 8, 10, 11, 13, ஓ—2, க—42, 43, 44, கு—3, 7, கை—1, கொ—7, சி—6, தூ—2, த—4, 9, 11, 13, 15, 16, தா— 2, 4, 8, து— 1, தே—2, ந—5, நா—6, நு—1, நே—1. நோ—1, ப—11, 16, 18, 21, 23, பா— 1, 10, பு—3, 4, ம-4, 10, வ—6, வா—1, வி - 10, 13, 14 ஆங்கிலம் - 1, 7, 10, 12, மலையாளம் - 16. (மொத்தம் 84. பழமொழிகள்)

18. பண்டைத் தமிழக நாகரிகமும் பண்பாடும்

அ - 216, ஆ—6, 25, 26, இ - 10, க - 27, கோ - 3 சா - 2, சி -2, த - 3, தா - 5, தி -4, தை-1, ப-7, 18, பா-5, பி - 3, பெ-1, பொ-4, ம-18, மு - 3,10, 12, மே1. வே-2, (மொத்தம் - 25 பழமொழிகள்)

19. பழந்தமிழாட்சி

அ - 1 218. ஏ - 2, தி - 2, பா - 11, (மொத்தம் - 5)

FREE E- BOOKS , www.thamizham.net.,

20. மண்ணில் விண்...

அ - 211, 219, 220, 221, 222, ஆ - 8, 25, 32, 36, 43, இ - 13, 15 உ - 11, ஊ-3, எ-6, 11, 18, 22, ஒ - 2, க-28, 35, 47, கு - 9, கே - 1, கை - 1, கோ - 1, சா - 2, செ - 1, 4, த - 7, 11, தா - 1, தே - 1, தொ - 1, நா-3, ப - 9, 14, பி - 4, ம - 17, மு - 12, மூ - 3, வ - 4, 5, வா - 11, வே - 3, ஆங்கிலம் - 2, 6, (மொத்தம் - 47, பழமொழிகள்.

21. முதல் தாய்மொழி

உ - 11, ஒ - 9, க -37, கா - 6, கு-20, தா - 3, பி - 3 (மொத்தம் - 7, பழமொழிகள்)

22. வடமொழி வரலாறு

ஆ - 15, 19, 21, உ - 9, 11, ஊ - 7, ஏ - 5, க - 9, 39, கு - 10, கொ - 5, ச - 1, 2, சி - 5, செ - 3, த - 1, ந -,1 நீ - 2, பி - 3, மு-9, 11, மொ-1, வா - 5, வே-4 மொத்தம்-24 பழமொழிகள்.)

23. வண்ணனை மொழிநூலின் வழுவியல் :-

இ-23, சா-1, த-12, து-3, மெ-1, வெ-1, வே-5 ஆங்கிலம்-13, (மொத்தம்—8.ப. மொ)

24. வேர்ச்சொல் கட்டுரைகள் :-

அ-229, ஆ-43, இ-24, ஒ-15, க-11, கா-7, கு - 4, 12 19, சு-3, தூ-1 செ-3 தொ-2, வி-2 (மொத்தம்-14 ப.மொ

25. "தென் மொழி"யில் வந்த கட்டுரைகள் :-

அ-100, 226, ஆ-20, இ-2 எ-4, 20, ஒ-1 க-1,3,5, 38, 41, கி-3, கு-5, 17, கோ-5 சு-2 தி-1 நா-5, 9, பா-6,

FREE E- BOOKS , www.thamizham.net.,

பி-2, பொ-6,7, மு-6,7,8, மே-2, மொ-1, யா-5. வா-6 முதல் 10 முடிய. (மொத்தம் - 35 ப. மொ)

தமிழ்-787, மலையாளம்-44, துளு-16, இந்தி-10, ஆங்கிலம்-13, மொத்தம்-870 பழமொழிகள்

பாவாணர் ஆண்ட பழமொழிகள் என்றென்றும்
சாவாப் பயன்மொழிகள் சாற்றியிதை - மேவி நூல்
தந்து தமிழ்தந்தான் தம்பி சி பூ மணி
முந்துறவே வாழ்த்துவேன் முன்.

**கவிவாணர். அய். உலகநாதன்**

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,



கொள்கையிலே மாறுபடாக்குன்றம்
உன்னைக்
கொண்டணைக்க வில்லை நாங்கள் என்றால்
இங்கு
கோட்டையிலும் பேட்டையிலும்
பாட்டையிலும் என்றும்
தமிழ் — குன்றும்.

— அய். உலகநாதன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,



## பாவாணர் அடிச்சுவட்டில்...

பாவாணரின் பைந்தமிழ் அடிச்சுவட்டில் அவரது தமிழ்ப் பணியை உயர்த்திப் பிடிக்கும் உன்னத நோக்கோடு நாளும் பொழுதும் உழைத்து வருகிறவர் சி.பூ.மணி.

பாவாணரின் தமிழ்த்தொண்டினை உலகறியச் செய்வதற்காக அவர் ஆற்றிவரும் பங்களிப்புக்கு இந்த நூல் சீரிய எடுத்துக்காட்டு.

□

வண்ண அச்சு : தமிழோசை அச்சகம்,
84, அபிபுல்லா சாலை, தியாகராயநகர்,
சென்னை-600 017.

FREE E- BOOKS , www.thamizham.net